# தொழிலாளர் பாதை

விலை ரூ1/00

● மாதமிரு இதழ் — இதழ் 404 ● 1991 ஏப்ரல் 12 வெள்ளிக்கிழமை


**ஏப்ரல் 21**

**தொழிலாளர் மகாநாட்டில் கலந்து கொள்ளுங்கள்**

- உலக வங்கி வேலைத்திட்டத்துக்கு எதிராக பொது வேலைநிறுத்தத்துக்கு அழைப்பு விடு!
- யூ. என். பி.யை வெளியேற்றி தொழிலாளர்— விவசாயிகள் அரசாங்கத்தை நிறுவு!

இடம் : ஹற்றன் டிக்கோயா நகரசபை

நேரம் : காலை 10மணி.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்


Periodicals Division Library 1991-6-7


## உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் மக்கள் முன்னணியை நிராகரி!

# ஜனநாயக நப்பாசைகளுக்கு இடமளியாதீர்!

யூ. என். பி. அரசாங்கம் நடாத்தவுள்ள மாநகரசபை, பிரதேச சபைத் தேர்தல்கள் எந்தவிதத்திலும் மக்கட் படுகொலைப் பிரேமதாச ஆட்சியின் ஜனநாயகமயமாக்கத்தை குறிக்காது எனவும், ஆதலால் எந்தவிதமான ஜனநாயக நப்பாசைகளுக்கும் இஞ்சித்தும் இடமளிக்கக் கூடாது எனவும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாள வர்க்கத்தையும், ஒடுக்கப்படும் மக்களையும் வேண்டிக் கொள்கின்றது.

யூ. என். பி.யின் தேர்தல் நம்பிக்கைப் பொறுப்பாளரான தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை 'அங்கீகரிக்கப்பட்ட கட்சி'யாகப் பிரிவு செய்யத்தொடர்ந்து மறுத்து வருவதன் மூலம் இந்த அரசாங்கத்தின் ஜனநாயகத் தேர்தல் இலட்சணம் நன்கு தெளிவாகின்றது. இந்நிலைமையின் கீழ் 'சுயேட்சைக் குழு என்ற 'லேபலின்' கீழ் தேர்தலில் நிற்பதைப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நிராகரிக்கின்றது.

23 வருடங்களுக்கு மேலாகத் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களிடையே தொடர்ந்து அரசியல் நடவடிக்கைகளில்ஈடுபட்டு வரும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், தனது கட்சியின் பெயரில் தேர்தலில் நிற்கும் வாய்ப்பை அடித்து மூடுவதன் மூலம் சுயாதீனமான தொழிலாள வர்க்க அரசியல் வழிமுறை தொடர்பாக முதலாளி வர்க்கம் கொண்டுள்ள வெறுப்பையும் பீதியையும் வெளிக்காட்டிக் கொண்டுள்ளது. இதற்கு ஏற்ற விதத்தில் சமசமாஜ — நவசமசமாஜ — இ. தொ. கா. தலைவர்கள் தொழிற்படத் தொடங்கியுள்ளனர். தத்தம் கட்சிகளது தேர்தல் சின்னங்களைக் கூடக் காட்டிக்கொள்ளாது விட்டு இத்தலைவர்கள் முதலாளித்துவ யூ. என். பி—ஸ்ரீ. ல. சு. க. முன்னணிகளில் நுழைந்து கொண்டுள்ளனர். முதலாளித்துவ அரசியல் கட்சிகளிலிருந்து வேறுபட்ட அரசியல் அடையாளத்தைச் சூழத் தொழிலாளர்களும், ஒடுக்கப்படும் மக்களும் அணிதிரளவுள்ள அடிப்படை உரிமையைக் கூடப் பறிக்கும் விதத்தில் இந்தப் பிராதேசிய சபைகளுக்கான தேர்தலில் ஆளும் வர்க்கமும் அவர்களின் கைக்கூலிகளான துரோக தொழிலாளர் அதிகாரத்துவங்களும் ஒன்றிணைந்து தொழிற்பட்டு வருகின்றன.

இப்பிராதேசிய சபைத் தேர்தல்கள் மூலம் 1988—89 ஜனாதிபதித் தேர்தலிலும், பாராளுமன்றத் தேர்தலிலும் யூ. என். பி. பெற்றுக்கொள்ள முடியாது போன 'மக்களாணையை' திருபித்துக்காட்டும் ஒரு சந்தர்ப்பமாக்கிக் கொள்ள முயற்சிக்கின்றது.

அதன் மூலம் தமிழ் தேசிய இனத்துக்கு எதிராக இடம் பெற்றுவரும் இனவாத யுத்தத்தினையும், கிராமப்புற ஏழைகளுக்கும் இளைஞர்களுக்கும்எதிராக இடம்பெறும்கொலைகாரப் பயங்கர இயக்கத்தினையும் அவ்வாறே தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களின் சகல உரிமைகளைப் பறித்து எடுப்பதும் கூட இந்த 'மக்களாணையின்' படியே இடம்பெறுவதாகக் காட்டிக்கொள்ளலாம் என ஏகாதிபத்தியச் சார்பு யூ. என். பி. ஆட்சியாளர்கள் நினைக்கிறார்கள்.

உலக வங்கிக் கட்டளையின் பேரில் தொழிலாள வர்க்கத்தின் தொழில், சேவை நிலைமைகளை அழித்தொழிக்க அரசாங்கம் ஆரம்பித்துள்ளஒருதொகை தாக்குதல்களுக்கு எதிராகத் தோட்டத்துறையிலும், நகர்ப்புற அரசாங்க தனியார் துறைகளிலும் தொழிலாளர்கள் ஒருதொகை வேலைநிறுத்தங்கள் மூலம் வர்க்கப் போராட்டத்தில் இறங்கியுள்ளநிலையிலேயே இம்மோசடி இடம் பெறுகின்றது.

### தோட்ட வேலைநிறுத்தம்

பெப்ரவரி 27ம் திகதி தோட்டத் துறையில் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் நாள் அடையாள வேலைநிறுத்தம் செய்தனர். இந்த வேலைநிறுத்தத்தில் சேர்ந்து கொள்ள வேண்டாம் என இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமான் விடுத்த கட்டளையையும் தூக்கி வீசிவிட்டு, பல்லாயிரக்கணக்கான இ. தொ. கா. அங்கத்தவர்களும்ஏனைய சங்கங்களுடன் இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர். தொண்டமான் யூ. என். பி. அரசாங்கத்தில் இருந்து வெளியேற வேண்டும் என்ற கருத்து பரந்த அளவில் பெருகிவருவதோடு, எதிர்ப்பு எல்லையை தாண்டிச் செல்லும் திசையிலான வேலைநிறுத்தத்துக்குதோட்டத்தொழிலாளர்களிடையே ஆதரவு வளர்ச்சி கண்டு வருகின்றது.

அத்தோடு கொழும்புச் சுற்றுப்புறங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான அநேக தனியார் கம்பனி ஊழியர்கள் கடந்த வாரம் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். தொழில் தொழிற்சங்க உரிமைகளைக் காக்கும் பொருட்டும், வேலைத்தலங்கள் மூடப்படுவதற்கு எதிராகவும் இப்போராட்டங்கள் பரவி வருகின்றன.

இரண்டு அரசியல் கோரிக்கைகளைக் கொண்ட சீ. எம். யூ.வின் ஒரு நாள் வேலைத்திருத்தமானது ஒன்றரை தசாப்தத்தின் பின்னர் இடம் பெற்றுள்ளது.

அரசாங்கக் இணைக்களங்கள் கூட்டுத்தாபனங்களை உலக வங்கிக் கட்டளையின்படி வெளிநாட்டு, உள்ளூர் முதலாளிகளுக்கு கையளிப்பதற்கு எதிராக தொலைத் தொடர்பு திணைக்களம் உட்பட இன்னும் பல வேலைத்தலங்களைச்சேர்ந்த தொழிலாளிகளின் பிரச்சாரம் வளர்ச்சி கண்டு வருகின்றது.

இலவசக் கல்வியையும், சௌக்கிய சேவையையும் ஒழித்துக் கட்ட அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளினால் நாடு பூராவும் கிளர்ந்துள்ள மக்கள் எதிர்பானது தொழிலாள வர்க்கப் போராட்டத்துடன் இணைந்து கொண்டுள்ளமை ஆளும் வர்க்கத்துக்கு பெரும் கிலியைஉண்டுபண்ணியுள்ளது

யூ. என். பி. அரசாங்கத்தின் இனவாத யுத்தத்துக்கு எதிராக தமிழ் தேசிய விடுதலைப் போராளிகள் தொடர்ந்து நடாத்தி வரும் தாக்குதல்களுடன் இவை இணையுமிடத்து சுகப்படுத்த முடியாத கடும் நிலைமை ஏற்படும். படையாட்களை விமானங்கள் மூலம் குவித்து வடக்கு — கிழக்கில் திணிக்கும் இராணுவ முகாம்களில் இருந்து சடலங்களையும் காயமடைந்தோரையும் விமானங்கள் மூலம் தினமும் ஏற்றி இறக்க வேண்டிய நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது. சிலாவத்துறை, கொக்கடியான், வேப்பங்குளம் முதலான இராணுவ முகாம்களுக்கு கடந்த இரண்டு வாரங்களாகத் கொடுக்கப்பட்ட தாக்குதலில் மட்டும் இறந்த படையாட்களின் எண்ணிக்கை 68 என உத்தியோக எல்லை அறிக்கைகள் கூறுகின்றன. இது இன்று காரைநகர் கடற்படை முகாம் மீதான தாக்குதலில் இறந்த படையாட்களின் எண்ணிக்கைக்கு முன்னர் கிடைத்த தரவுகளாகும்.

### சோடனை

இந்நிலையில் வட — கிழக்கு மாகாணங்களில் பிராதேசிய சபைகளுக்கான தேர்தல்சோடனையில் ஈடுபட யூ. என். பி.


(2-ம் பக்கம் பார்க்க)


## மேதின ஊர்வலமும் கூட்டமும்



★ ஏகாதிபத்தியத்துக்கு எதிராக பாட்டாளி வர்க்க அனைத்துலகவாத ஐக்கியத்தினை உறுதி செய்!

★ தமிழர் விரோத இனவாத யுத்தத்தினை நிறுத்து!— கிராமப்புற படுகொலைகளை நிறுத்து! உலகவங்கி— யூ. என். பி. திட்டங்களை தோற்கடி!

★ யூ. என். பி. அரசாங்கத்தை வெளியேற்று! தொழிலாளர் — விவசாயி அரசாங்கத்துக்கு போராடு!

★ உலக சோசலிசப் புரட்சியை நோக்கி முன்னேறு!

ஊர்வலம் : மாலை 1/30 நியூஹாம் சதுக்கம் (கொச்சிக்கடை சேர்ச் அருகில்)

கூட்டம் : இரத்தினம் மைதானம் (கொட்டாஞ்சேனை) மாலை 5.00 மணி.

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்**
**இளம் சோஷலிஸ்டுகள்**


உள்ளே — பக்கம் 4—5 கிராமப்புற படுகொலைகளை நிறுத்து! கடந்த இதழின் தொடர்ச்சி


## வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி சபை தேர்தல்களில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்துக்குஇடம் இல்லை. தமிழ் தேசிய இனத் தொழிலாளர்களதும், ஏழைகளதும் தேவை, இனவாத முதலாளித்துவ அரசினைத் துடைத்துக் கட்டுவதே. யூ. என். பி.யுடனும் இனவாத அரசபடைகளுடனும் அணிசேர்ந்து கைக்கூலி கொலையாளிகளாக தொழிற்படும் புளொட், ஈ. பீ. ஆர். எல்; எப், ஈ. என். டி. பீ, டெலோ, ஈரோஸ் போன்ற இயக்கங்களுக்குவடக்கு—கிழக்கில் முதலாளித்துவ அரசின் தேர்தல் வேலைகளில் ஈடுபட முடியாமல் போயுள்ளது. குட்டி முதலாளித்துவத் தேசியவாத விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பேரம் பேசும் சமரசங்கள் மீண்டும் மீண்டும் தகர்ந்து கொட்டுவதானது முதலாளித்துவ ஜனநாயகத்தின் கீழ் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு கிடையாது என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது.

தென் மாகாணங்களில் தொழிலாள வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் வர்க்கப் போராட்டத்தினை சகல விதத்திலும் தவிர்க்க தொழிற்படுவதன் மூலம் யூ. என். பி. அரசாங்கத்தின் ஆளுமையை பேணிக்காக்கச் செயற்படும்சம சமாஜ — கம்யூனிச — நவசம சமாஜ—இ. தொ. கா தலைவர்களதும் மற்றும் மத்தியவாதிகளதும் துரோகம் இந்நிலையிலேயே பன்மடங்காக அதிகரித்துள்ளது.

கிராமப்புற ஏழைகளுக்கும் இளைஞர்களுக்கும்எதிராக அரச படையணிகளையும் குண்டர்கும்பல்களையும் ஏவிவிட்டு, படுகொலை, பயங்கர இயக்கம் நடாத்தி வரும் நிலையிலும் — அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்து வரும் நிலையிலும் தேர்தலில் போட்டியிட இத்தலைவர்கள் தயாராகியுள்ளார்கள். அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் பொதுமக்களுக்கு எதிராக கொலைகார அரச பலத்தினைப் பயன்படுத்துவது நின்றபாடாய் இல்லை. ஆனால் இந்தத் துரோகத் தலைவர்கள் தொழிலாளர்களுக்கும் ஏழைகளுக்கும் கூறுவது என்ன? உள்ளூராட்சிச் சபைத் தேர்தலின் பின்னணியில் பிற்போக்கு முதலாளித்துவ ஆட்சியின் இரத்தப் பலியெடுப்புக்களை நிறுத்த முடியும்! இது தொழிலாளர்களையும் ஏழைகளையும் அரசியல் ரீதியில் நிராயுதபாணியாக்கி, பலி கொடுக்கும் பொருட்டு ஆளும் வர்க்கத்துடன் அணிதிரள்வதன்றி வேறென்ன?

முதலாளித்துவ உலக நெருக்கடியின் மத்தியில் ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் “பலாத்காரமாக வேலைவாங்கு” என்ற சுலோகத்தின் கீழ் அணிதிரண்டுள்ள நிலையில் இத்துரோகத் தலைவர்கள் பரப்பிவரும் மக்கள் முன்னணி ஜனநாயக நப்பாசைகள் நூறுமடங்கு ஆபத்தானவையாகும். ஈராக்கில் தொழிலாள—ஒடுக்கப்படும்மக்களுக்கு எதிராக குண்டுமாரி பொழிந்த ஏகாதிபத்தியப் படைகளுக்கு விமான நிலைய வசதிகள் வழங்கவும் கூட உடன்பட்டதன் மூலம் பிரேமதாச ஆட்சியாளர்கள் இந்த இராணுவ ஆக்கிரமிப்பு வேலைத் திட்டத்தினை தாம் முழுமனே அங்கீகரிப்பதைக் காட்டினர். யூ. என். பி. அரசாங்கம் இந்த விதத்தில்உள்நாட்டிலும்வெளிநாட்டிலும் பலாத்காரமாக ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்குத் தன்னை அர்ப்பணம் செய்து கொண்டுள்ளது. உள்ளூராட்சி சபைத் தேர்தல்களால் இந்தக் கடைகெட்ட இராணுவ வழிமுறையை மூடிமறைத்துவிட முடியாது.

தொழிலாள வர்க்கம் இன்று இந்த ஏகாதிபத்தியச் சார்பு யூ.என்.பி. அரசாங்கம்தொடுக்கும் சகல தாக்குதல்களையும் தோற்கடிக்கும் பொருட்டு பொது வேலை நிறுத்தத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த விதத்தில் வேலைத்திட்டத்தினைகலந்துரையாடி, தீர்மானம் எடுக்கும் பொருட்டு சகல தொழிலாளர் அமைப்புக்களதும் தொழிற்சங்கங்களதும் பேராளர் மகாநாடு உடனடியாகக் கூட்டப்பட வேண்டும்.

## பொது வேலைநிறுத்தம்

இன்று அவசியப்படுவது யூ. என். பி.க்கு எதிர்ப்புக்காட்டுவதே அல்லது நெருக்கு வாரம் தொடுக்கும் போராட்டமோ அல்ல. அவை உதவாக்கரையான வேலைகள். யூ என். பி. யை வெளியேற்றி முதலாளித்துவ மக்கள் முன்னணிகளுக்கு இடமளிக்காமல் தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொணரும் இலக்குடன் தொழிலாள வர்க்கம் பொது வேலைநிறுத்தத்துக்கு தயாராக வேண்டும்.

ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினையும் கிராமப்புற ஏழைகளையும் இளைஞர்களையும் தொழிலாள வர்க்கத்தினைச் சூழ அணிதிரட்டிக் கொள்வது இங்கு முக்கியமானது. முதலாளித்துவ ஆட்சியின் கீழ் நசுக்கப்பட்டுள்ள இந்த மக்கட் பகுதியினரின் ஜனநாயக உரிமைகளை உறுதி செய்கின்றதும் அவர்களின் பாரிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக் கூடிய சோசலிச வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்றதுமான அரசினை நிர்மாணிக்கும் வேலைத்திட்டத்தினைச் சூழ அவர்களின் பூரண ஆதரவினை தொழிலாள வர்க்கத்தினால் வெற்றிகொள்ள முடியும்.

இது தொழிலாள வர்க்கத்தின் அரச ஆட்சிக்கான போராட்டமாகும். இதற்கு அவசியமான சோவியத் சபைகளைக் கட்டி எழுப்புவதற்கான முதல் நடவடிக்கையாக பக்டரி கமிட்டிகளையும், பாதுகாப்புக் கமிட்டிகளையும் தொழிலாள வர்க்கத்தின் தொடங்கிவைப்பின் மூலம் உடனடியாகக் கட்டி எழுப்ப வேண்டும். ஒடுக்கப்படும் தமிழ் மக்களையும், கிராமப்புற ஏழைகளையும் இந்த ஆட்சி அமைப்புக்களைச் சூழ அணிதிரட்ட வேண்டின், தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை உத்தரவாதம் செய்யவும் கிராமப்புறப் படுகொலைகளை நிறுத்தவும் தொழிலாள வர்க்கம் சுயாதீனமாக தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

இலங்கைத் தொழிலாள வர்க்கம் முகம் கொடுத்துள்ள பொறுப்புக்கள், உலகத் தொழிலாள வர்க்கத்தின் வரலாற்றுப் பொறுப்பின் ஒரு பாகமாகும், இதன் அர்த்தம், அனைத்துலகவாதப் புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் நின்று கொள்ளும் இந்நாட்டுத் தொழிலாள வர்க்கத்துக்கு உலகத் தொழிலாள வர்க்கத்தின் ஆதரவினை வெற்றிகொள்ளும் பூரண வாய்ப்பு உண்டு என்பதேயாகும்.

இதன் பேரில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே போராடுகின்றது. தொழிலாள வர்க்கத்திலதும் ஒடுக்கப்படும் மக்களதும் சகல பகுதியினரும் பு. க. க. வில் சேர்ந்து மேற்சொன்ன வேலைத்திட்டத்தினை வர்க்க இயக்கத்தினுள் எடுத்துச் செல்லப் போராடத் தீர்மானம் செய்ய வேண்டும்.

மாநகரசபை பிரதேச சபைத் தேர்தல்களில் வர்க்க இயக்கத்தின் முன்னேறியபகுதியினரை மேற்சொன்ன தீர்மானத்துக்கு இட்டுச் செல்ல உதவும் விதத்தில் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கட் போராளிகள் செயற்பட வேண்டும். யூ, என். பி. சி.ல.சு.க. முதலாளித்துவக் கட்சிகளுடன் சேர்ந்து சமசமாஜ—கம்யூனிச—நவசம சமாஜ—இ. தொ. கா. தலைவர்கள் திணித்துள்ள மக்கள் முன்னணியே அதற்குப் பெருந்தடையாக உள்ளது என்பதை இங்கு சகலரும் புரிந்து கொள்வது அவசியம். தமது கட்சிகளின் சின்னத்தையே முழுப் படியே முதலாளித்துவக் கட்சிகளுக்கு காட்டிக்கொடுக்கும் அளவுக்கு இந்த மக்கள் முன்னணி அரசியல் சென்றுள்ளது.

ஆதலால் இக்கட்சிகளின் எந்தவொரு வேட்பாளருக்கும் எந்தவொரு இடத்திலும் வாக்களிக்க இயலாது போயுள்ளது. இந்த முன்னணியை முழுமனே நிராகரிக்கும்படி நாம் தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் வேண்டிக்கொள்கின்றோம். சமசமாஜ — கம்யூனிச—நவசமசமாஜ— இ.தொ. கா. வேட்பாளர்கள் தத்தம் கட்சிகளின் சொந்த சின்னத்தின் கீழ் போட்டியிடும் இடங்களில் மட்டும் அவர்களுக்கு வாக்களிக்க முடியும். எனினும் அதனை அவர்களின் மக்கள் முன்னணி அரசியலிலிருந்து தொழிலாளர்களையும், ஒடுக்கப்படும் மக்களையும்மீட்பதற்கான போராட்டத்தின் ஓர் உபாயமாக மட்டுமே கையாள வேண்டும். அத்தகைய சந்தர்ப்பங்களில் அந்தந்தக் கட்சிகளின் பட்டியலில் நுழைந்துள்ள யூ, என். பி—சிறீலங்கா வேட்பாளர்களைத் தோற்கடிக்க சமசமாஜ — கம்யூனிச — நவசம சமாஜ—இ.தொ.கா போராட வேண்டும் என நிர்ப்பந்திக்க வேண்டும்.

படுமோசமான மோசடி விதிமுறைகளில் ஈடுபட்டிருப்போர் நவசமசமாஜ தலைவர்களே. அவர்கள் மக்கள் முன்னணி அரசியலை உச்சாடனம் செய்யும் [illegible] தலில் முன்வைத்துள்ளனர். தேர்தலில் “யூ. என். பி. எதிர்ப்புக் கட்சிகளின் சகவாழ்வு” எனப்படுவது நீடிக்க வேண்டும் எனக் கூறிக் கொண்டு இவர்கள் சிறீலங்கா சுதந்திரக்கட்சியைக் காக்கத் தோள் கொடுத்துள்ளனர்.

யூ. என். பி—சி. ல. சு. க. முதலாளித்துவக் கட்சிகள் தோற்கடிக்கப்படுவது தொழிலாள. ஒடுக்கப்படும் மக்களுக்கு அவசியம். முதலாளித்துவக் கட்சிகளுடன் தம்மைப் பிணைத்துக் கொண்டுள்ள துரோகத் தலைவர்களின் மக்கள் முன்னணி அரசியலினாலேயே அது தவிர்க்கப்பட்டு வந்துள்ளது. ஆதலால் இந்தத் தேர்தல் சந்தர்ப்பத்தினையும், ஏனைய சகல தருணங்களையும் தொழிலாள வர்க்கத்தின் சுயாதீன அரசியல் விதிமுறைக்கான வழிதிறக்கப் பயன்படுத்த வேண்டும். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினை தொழிலாள வர்க்கத்தின் புரட்சிக் கட்சியாகக் கட்டி எழுப்புவதன் மூலமே அந்த விதிமுறை புரட்சிகர வேலைத்திட்டத்தின் கீழ் உச்சக் கட்டத்தினை அடைய முடியும்.

---

## பு. க. க. அபிவிருத்தி நிதி ரூபா 100,000 ‘தொழிலாளர் பாதை’, ‘கம்கறு மாவத்த’ சந்தாதாரர் 500

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ரூபா 100,000/- அபிவிருத்தி நிதியை ஆரம்பித்துள்ளது. மார்ச் 01ம் திகதி ஆரம்பமாகிய இந்நிதிதிரட்டல் மே 1ம் திகதி 1 இலட்சம் இலக்கினை எட்டவேண்டும் அத்தோடு ‘தொழிலாளர் பாதை’ ‘கம்கறு மாவத்த’ பத்திரிகைகளுக்கு 500 சந்தாதாரரை திரட்டும் இயக்கமும் ஆரம்பமாகியுள்ளது.

இந்த இலக்கினை வென்றெடுக்க ஊக்கமுடன் உழைக்குமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அங்கத்தவர்களையும் ஆதரவாளர்களையும், பத்திரிகை வாசகர்களையும் வேண்டுகின்றது.

உலக ரீதியிலும், இலங்கையிலும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை தொழிலாள வர்க்க அனைத்துலகவாத வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரட்ட நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அதன் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் மட்டுமே போராடுகின்றன.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் தலைமையில் ஈராக்குக்கு எதிராக இடம்பெற்ற யுத்தத்தில் ஏகாதிபத்தியத்தின் அடிப்படை முரண்பாடுகள் உக்கிரம் கண்டமை தெரிய வந்தது. ஏகாதிபத்தியவாதிகள் காலனிகளை கொள்ளையடிக்கும் உலகினை மீண்டும் கூறுபோடும் யுத்தக் காலப்பகுதிக்குள் மனித இனத்தினை மீண்டும் இழுத்துச் செல்கின்றனர். இந்த ஏகாதிபத்திய நெருக்கடி பிரமாண்டமான புரட்சிகரப் போராட்டங்களை தூண்டிவிடுவதோடு முதலாளித்துவத்தினை பூகோளத்தில் இருந்து துடைத்துக் கட்டுவதற்கான நிலைமைகளையும் சிருஷ்டித்துள்ளது.

இலங்கையில் பிரேமதாச அரசாங்கம், ஏகாதிபத்தியவாதிகளின் இந்தக் கொலைகார நலன்களுக்குச் சேவகம் செய்யத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. இதன் மூலம் தொழிலாளர், கிராமப்புற ஏழைகள், தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளை நசுக்கும் பொருட்டு கொடிய இராணுவ ஆட்சியினை உண்டுபண்ண முயற்சித்துக் கொண்டுள்ளது.

யூ. என். பி — உலக வங்கித் தாக்குதல்களுக்கு எதிராகத் தொழிலாள வர்க்கத்தின் புதிய போராட்டங்கள் வெடித்துள்ளன. கிராமப்புற ஏழைகள் பிரேமதாச அரசாங்கத்தின் கொடிய பயங்கர ஆட்சியையிட்டு பெரும் வெறுப்படைந்துள்ளனர். வட — கீழ் மாகாண ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினர் பிரேமதாச அரசாங்கத்தின் யுத்தத்துக்கு முகம் கொடுத்துள்ளனர். இந்த நிலைமையிலேயே யூ. என். பிக்கும் முதலாளித்துவ சி. ல. சு. க.வுக்கும் தொழிலாள ஒடுக்கப்படும் மக்களை காட்டிக் கொடுக்கும் நடவடிக்கையில் சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இ. தொ. கா. தலைவர்களும் மற்றும் மத்தியவாத அமைப்புக்களின் தலைவர்களும் ஈடுபட்டுள்ளனர்.

பு. க. க. தொழிலாள வர்க்கத் தலைமையில் ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டச் செய்யும் போராட்டம் மிகவும் தீர்க்கமானது. துரோகத் தலைமைகளை அகற்றி ட்ரொட்ஸ்கிசத் தலைமையை தொழிலாள வர்க்கத்துள் ஸ்தாபிதம் செய்யவேண்டும். எமது இலக்கு இப்போராட்டத்துடன் இணைந்து கொண்டுள்ளது. காலதாமதமின்றி தங்கள் உதவி நிதியை எமக்கு அனுப்பவும். ‘தொழிலாளர் பாதை’, ‘கம்கறு மாவத்த’ சந்தாதாரர்களாகுங்கள்.

உதவி நிதியையும் சந்தாப் பணத்தையும் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புக:

ஆனந்த வக்கும்புற,
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு — 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மண்டேல், நவசமசமாஜக் கட்சியுடன் புதிய எதிர்ப்புரட்சிக் கூட்டு

கடந்த இதழின் தொடர்ச்சி

வட—கிழ் மாகாண தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் விடுதலைப் போராட்டத்தினை நசுக்கவும் தென் மாகாணங்களில் தொழிலாளர்கள், ஏழைகளை நசுக்கும் பொருட்டு இலங்கை இராணுவத்தினை அங்கிருந்து விடுவிக்கவும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் அங்கீகாரத்துடன் இந்திய ராஜீப் காந்தி அரசாங்கத்துக்கும் இலங்கை ஜயவர்தன அரசாங்கத்துக்கும் இடையே 1987 ஜூலையில் இந்திய — இலங்கை உடன்படிக்கை கைச்சாத்தானது. இந்த உடன்படிக்கைக்கு இதன் அடிப்படையில் இந்தியா இராணுவத்தினை தருவிக்கவும் நவசமசமாஜ தலைவர்கள் முண்டு கொடுத்தனர். இவர்கள் 1987 ஜூலையில் கைச்சாத்தான பிற்போக்கு இந்திய — இலங்கை உடன்படிக்கைக்கு முன்னோடியாக இடம்பெற்ற ஜயவர்தனவின் வட்டமேசை மகாநாடுகளில் கலந்து கொண்டனர். அதன் மூலம் நவசமசமாஜ தலைவர்கள் சமசமாஜ, கம்யூனிஸ்ட் தலைவர்களுடன் சேர்ந்து இவ்வுடன்படிக்கைக்கு வழியமைத்தனர். 1987 இந்திய-இலங்கை உடன்படிக்கை சம்பந்தமாக நவசமசமாஜ கட்சி பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்னவின் கையெழுத்துடன் வெளியான அறிக்கை பின்வருமாறு குறிப்பிட்டது:

"... எவ்வாறெனினும் மேற்கத்தைய ஏகாதிபத்தியவாதிகளின் உதவியோடு வலதுசாரி அரசொன்றினை இங்கு உருவாக்கக் கனவு கண்டுகொண்டிருந்த சிங்கள அரைப் பாசிச இனவாதிகளுக்கு இதுவோர் அடியாகும். உண்மையில் இது பிரேமதாச கும்பலுக்கு ஒரு தோல்வியாகும். இலங்கையினுள் மேற்கத்தைய ஏகாதிபத்தியத்தின் இராணுவ அரசியல் செல்வாக்குகளை தடுக்கின்ற, இலங்கை வரையும் இதனால் பரந்துபட்டுள்ள இந்து-சோவியத் பாதுகாப்பு உடன்படிக்கையினை இவர்களால் சகித்துக் கொள்ள முடியாதிருக்கும் .."

1987 நவம்பரில் இருந்து இந்திய ஆக்கிரமிப்புப் படைகள் வட—கிழ் மாகாணங்களில் தொடுத்த இரத்தக் களரிகளை அங்கீகரிக்கும் விதத்தில் நவசமசமாஜ தலைவர்கள் அறிக்கைகளை வெளியிட்டனர். மூதலாளித்துவ மக்கள் கட்சியுடனும் சமசமாஜ — கம்யூனிஸ்ட் தலைவர்களுடன் சேர்ந்து கூட்டறிக்கைகளை வெளியிட்டனர். இந்தக் கூட்டறிக்கை தமிழ் போராளிகளை உடனடியாக நிராயுதபாணியாக்கும் படி கோரியது: "வட — கிழ் பிரதேசங்களில் சமரசத்துக்கு (இந்திய—இலங்கை உடன்படிக்கைக்கு) எதிரான சகல சக்திகளையும் நிராயுதபாணியாக்குதல் நடைமுறைப்படுத்தல் உட்பட அப்பகுதிகளின் வழமை நிலைக்குக்கொணரும் பொருட்டு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பது இதற்காகச் செய்ய வேண்டிய அவசரப் பணியாகும் ..."



குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவின் மரணச் சடங்கில் நவசமசமாஜ தலைவர் வாசுதேவ நாணயக்கார

இந்திய—இலங்கை உடன்படிக்கையின் கீழ் திணிக்கப்பட்ட மோசடி மாகாண சபைகள் மூலம் தமிழ் மக்களின் தேசிய ஜனநாயக உரிமைகள் கிடைத்துவருவதாகக் கூறிக் கொண்டு, அதற்குப் பந்தம் பிடித்த ந. ச. ச. க. தலைவர்கள், இந்திய—இலங்கை அரசாங்கங்களின் அப்பட்டமான ஏஜண்டுகளான ஈ.பி.ஆர்.எல். எப்— தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்களுடன் அணிதிரண்டனர். தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான வர்க்க நிலைப்பாட்டினை ஒதுக்கித்தள்ளிவிட்டு, இவர்கள் பப்லோவாத சமசமாஜக் கட்சி, ஸ்டாலினிச கம்யூனிஸ்ட்கட்சியுடன்சேர்ந்து இந்திய ஆக்கிரமிப்புப் படைகளுக்கு ஆதரவளித்தனர். இதன் மூலம் கிராமப்புற ஏழைகளின் முன்நிலையில் தொழிலாள வர்க்கத்தினை அபகீர்த்திக்குள்ளாக்கவும், பாசிச இயக்கமான ஜே.வி.பி.வெளிப்படவும் வாய்ப்பான நிலைமைகளை சிருஷ்டித்தனர்.

பிரேமதாச அரசாங்கத்துடனான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் துரோகப் பேச்சுவார்த்தைமுறிவடைந்து 1990 ஜூனில் மீண்டும் சிவில் யுத்தம் வெடித்தது. தமிழர் விரோத இனவாத யுத்தத்தினை நடாத்தும் பொருட்டு பிரேமதாச அரசாங்கம் பாராளுமன்றத்தில் யுத்த வரவுசெலவுத்திட்ட குறைநிரப்பு மதிப்பீட்டினைச் சமர்ப்பித்தது. இதற்கு ஆதரவாக வாசுதேவ நாணயக்கார பாராளுமன்றத்தில் வாக்களித்தது மட்டுமன்றி, நவசமசமாஜக் கட்சி, தமிழர் விடுதலைப் போராட்டத்தின் தோல்வியின் பேரிலான பிரச்சாரத்தினை முன்னெடுத்துச் சென்றது அந்த விதத்தில் நவசமசமாஜ தலைவர்களின் கரங்கள் தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் இரத்தத்தில் தோய்ந்து போயுள்ளது. 'தாய்நாட்டை ஐக்கியப் படுத்தும்' பொருட்டு [illegible] இனவாத முதலாளிகளிடையே 'பிஸ்மார்க்' ஒருவர் உதயமாகா தததையிட்டு குறைப்பட்டுக் கொள்ளும் ந. ச. ச. க. தலைவர்கள், தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் சார்பில் நின்று வருகின்றார்கள் என்ற பச்சைப் பொய்யினை ஏர்னஸ்ட் மண்டேல் பரப்பி வருகின்றார். ஏர்னஸ்ட் மண்டேலின் ஐக்கிய செயலகம் எனப் படுவதற்கும் ந. ச. ச. க. தலைவர்களுக்கும் இடையே இரண்டு வருடங்களாக நடைபெற்று வருவதாகச் சொல்லப்படும் கலந்துரையாடல்களின் இப்பிற்போக்கு அம்சமும் ஒன்றாகும்;

## தொழிற் சங்கங்களினுள்

நவசமசமாஜக் கட்சியினர் தொழிற்சங்கத் துறையில் ஆதரவினை வென்றுகொண்டுள்ளதாக. மண்டேலின் 'இன்டர்நஷனல் வியூ பொயின்ட்' சஞ்சிகைக்கு கட்டுரை தீட்டியவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் அது நாற்றமெடுக்கும் கைக்கூலிகளின் மற்றோர் 'சாதனை' யாகும்;

பன்னாட்டுக் கம்பனியான யூனிலிவரின் இலங்கைப் பகுதியான லீவர் பிரதர்ஸ் கம்பனியின் முதலாளிகளுடன் வர்த்தக, கைத்தொழில் ஊழியர் சங்கத்தின் பிரபல நவசமசமாஜ தலைவர்களான லீனஸ் ஜயதிலகவும், சரணபால டி: சில்வாவும் ஒரு உடன்படிக்கையைச் செய்து கொண்டனர்; 1988 ஆகஸ்ட் 16ம் திகதி கைச்சாத்தான — தொழிலாளர்களுக்கு தண்டனை வழங்கும் இந்த உடன்படிக்கையின் ஒரு சரத்துக் கூறுவதாவது!

"29: தொழிற்சங்க நடவடிக்கை!

இந்த உடன்படிக்கை நடைமுறையில் இருக்கும் அல்லது புதுப்பிக்கப்படும் காலப்பகுதியில் எந்தவிதமான கைத்தொழில் ... மாகவும் அந்தக் கைத்தொழில் தகராறு இவ்வுடன்படிக்கைக்கு சம்பந்தமாகவோ அல்லது சம்பந்தமில்லாமலோ எந்தவிதமான வேலைநிறுத்தத்தில் அல்லது மெதுவாக வேலை செய்வதில் அல்லது வேலையை பகிஷ்கரிப்பதில் ஊர்வலம் செல்வதில் அல்லது அத்தகைய தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடாது என தொழிற்சங்கம் அல்லது அதன் அங்கத்தினர்கள் உடன்படுகிறார்கள்"

இந்தக் கேடுகெட்ட துரோகத்தினை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சவால் செய்த வேளையில், நவசமசமாஜ தலைமையிலான வர்த்தக, கைத்தொழில் ஊழியர் சங்கத்தின் லீவர் கிளை ஒரு துண்டுப் பிரசுரத்தினை வெளியிட்டது. அப்பிரசுரம் 1968 செப்டம்பர் 19ம் திகதி சமசமாஜக் கட்சியின் மாஜி தலைவரான கலாநிதி என்.எம். பெரேரா லீவர் முதலாளிகளுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் சரத்துக்கள் இச்சரத்துக்களுக்குச் சமானமானவை எனக் குறிப்பிட்டது உண்மையில் அப்படியே. ந. ச. ச. க. துரோகிகள் தொழிலாளர்களுக்கு திரும்பத் திரும்பக் கூறி வந்தது என்ன? நாம் சமசமாஜக் கட்சித் தலைவர்களில் இருந்து வேறுபட்ட தலைமையை கட்டி எழுப்பி வருவதாக கூறிக் கொண்டனர். இன்று அவர்கள் உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் அப்பட்டமான கையாளாகச் செயற்பட்டுவந்த 'சமூக ஜனநாயகவாதி' கலாநிதி என், எம்.பெரோவுக்கு சமானமான தலைமையை வழங்கி வருவதாக சத்தியப் பிரமாணம் செய்கின்றனர்! சேற்றில் விழுந்த சமசமாஜ எனும்பைத் தூக்கி தொழிலாள வர்க்கத்தின் தலைமேல் வைப்பதாக கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன 13வது மகாநாட்டில் கூறியது சும்மா அல்ல.

தொழிற்சங்கக் கும்பலைக் பெரிதாக்கும் பொருட்டு நவசமசமாஜ தலைவர்கள் ஸ்டாலினிஸ்டுகளுடன் நடாத்திய நாய்ச் சண்டையில் மேற் சொன்ன உடன்படிக்கையில் கைச்சாத்திடும் பொருட்டு ந. ச. ச. க. தலைவரான லீனஸ் ஜயதிலக பிரித்தானிய யூனிலிவர் பெருமுதலாளிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தும் பொருட்டு பிரித்தானிய விஜயத்தை மேற்கொண்டார். இச்சந்திப்புத் தொடர்பாக உருவான உலகப் பிரசித்தி பெற்ற குற்றச்சாட்டுக்கு ந. ச. ச. க. தலைவர்கள் இன்னமும் பதிலளிக்கவில்லை, இதே வகையறுவைச் சேர்ந்த கூட்டுஉடன்படிக்கைகளை ந. ச. ச, க. தலைவர்கள் வேறும் பல பன்னாட்டுக் கம்பனிகளுடன் செய்து கொண்டுள்ளார்கள்.

ந. ச. ச. க. தலைவர்கள் தமது தொழிற்சங்கச் சீடர்களை முதலாளிகளின் உயர் பதவிகள், கைலஞ்சங்கள் பெறும்'கோபரேட்வாதிகளாக செயற்படச் செய்து வந்தனர் இரத்மலானை 'இன்டர்நஷனல் காமன்ட்ஸ்' வர்த்தக, கைத்தொழில் ஊழியர் சங்கத்தின் செயலாளரும், ந. ச. ச. க. அங்கத்தவருமான சிங்கபாகு' தொழிற்சங்க நடவடிக்கையின் பொருட்டு கடமையில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கையில் முதலாளிகளால் உதவி உற்பத்தி முகாமையாளர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவை சாதாரண வகையிலான பதவி உயர்வு அன்றி, தொழிலாளர்களை பலிகொடுப்பதன் சார்பில் வழங்கப்படும் கட்டணமாகும். 1990 டிசம்பரில் கனடா லங்கா அப்பரல் கம்பனி சங்க கிளையின் செயலாளர் முதலாளிகளின் கையாளாக அம்பலமாகி, தொழிலாளர்களின் எதிர்ப்புக்கு உள்ளாகியதோடு செயலாளர் பதவியில் இருந்தும் இராஜினாமாச் செய்ய நேரிட்டது. ஆனால் அவரை மீண்டும் அதே பதவியில் அமர்த்த ந. ச. ச. க. தலைவர்கள் பாடாப்பாடு பட்டார்கள். தொழிற்சங்கங்களின் சுயாதீனத்தினை இந்த விதத்தில் ஒழித்துக்கட்ட ந. ச. ச. க. தலைவர்கள் தொழிற்பட்டுவருகின்றார்கள். தொழிற்சங்க பதவிகளுக்கு நியமனம் பெறும் தமது அங்கத்தினரை ந. ச. ச. க. இந்த விதத்தில் முதலாளிகளின் கைக்கூலிகளாக செயற்படும்படியும், நிர்வாகத்துடன் இணைந்து கொள்ளும்படியும் தூண்டுகின்றது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத் தலைமையினை இலங்கை மத்திய வங்கி ஊழியர் சங்கத் தலைமையில் இருந்து அகற்றும் அவசியம் மத்திய வங்கி அதிபருக்கும் யூ. என்.பி அரசாங்கத்துக்கும் உருவான போது நவசமசமாஜ தலைவர்கள் அதில் நேரடியாகக் கலந்து கொண்டனர். நவசமசமாஜ கட்சி செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னவின் பணிப்பின் பேரில் ந ச.ச, க. தலைமைப் பீடத்தைச் சேர்ந்த சுனில் ரத்னப்பிரியவும் சரணபால த சில்வாவும் (லீவர் கம்பனியுடன் கூட்டு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டவர்களில் ஒருவர்) மத்தியவங்கி ஊழியர் சங்கம் அறியாத முறையில் மத்திய வங்கி ஆளுனர் நெவில் கருணாரத்னவினைச் சந்தித்து சதிக்கான ஏற்பாடுகளைச் செய்தனர். இது உண்மையில் படு பிற்போக்குக்குரிய காலி வேலையாகும். மத்திய வங்கி ஊழியர் சங்கச் செயலாளரும் புரட்சிக் கம்யூனிஸ்ட்

(7ம் பக்கம் பார்க்க)

# கிராமப்புற படுகொலைகளை நிறுத்து

## — புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அரசியல் குழுவின் அறிக்கை — 1991-02-08

முதலாளித்துவ ஆயுதப் படைகளின் மக்கட் படுகொலைகளில் இருந்து கிராமப்புற மக்களையும் அவ்வாறே ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினரையும் காப்பாற்றும் பொருட்டு இலங்கையிலும் அனைத்துலகிலும் தொழிலாள வர்க்கத்தினை அணிதிரட்டும் விதத்தில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும், நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவும் தொடுத்துள்ள பிரச்சார இயக்கத்தின் இலக்கு, இத்துரோக அதிகாரத்துவங்களால் தொழிலாள வர்க்கத்தின் மேல் திணிக்கப்பட்டுள்ள சுமையைச் சிதறடிப்பதே.

இது எந்த விதத்திலும் முதலாளித்துவ ஜனநாயகம் பற்றிய நப்பாசைகளுக்குத் தூபம் போடும் இயக்கம் அல்ல. முதலாளித்துவ ஜனநாயகம் எனும் போது அது வேறுவடிவத்தில் இருந்து வரும் நிதி மூலதனத்தின் சர்வாதிகார ஆட்சியாகும் ஏகாதிபத்திய சகாப்தத்தில் 'சமாதான காலப்பகுதி' எனப்படுவது. எதிர்வரும் உலக யுத்தத்தின் பேரில் பிற்போக்காளர்களைத் தயார் செய்யும் காலப் பகுதியாகும். அவ்வாறே முதலாளித்துவ ஜனநாயகம் எனப்படுவதும் ஆளும்வர்க்கம் தமது அப்பட்டமான இராணுவ — பொலிஸ் சர்வாதிகாரத்திற்கான தயாரிப்பை மூடிமறைக்கச் செய்யும் ஒரு மூடுதிரையாகும். ஏகாதிபத்தியம் அதனது சகல முரண்பாடுகளையும் சமாதான வழிகளில் தீர்த்துக் கொள்ளும் வல்லமை கொண்டுள்ளது என்ற நப்பாசைகளை விதைப்போர் அனைவரும் இன்று உலகளாவிய ரீதியில் இடம் பெற்று வரும் இரத்தக் களரிகளுக்குப் பொறுப்பேற்க வேண்டும். அவ்வாறே ஆளும் வர்க்கத்தை ஒழுங்குமுறைப் படுத்தி, கட்டுப்படுத்தி முதலாளித்துவ ஜனநாயகம் ஊடாக அதனது ஒடுக்குமுறை இலட்சணங்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என்ற சலனங்களை உண்டுபண்ணும் சகல சீர்திருத்தவாதிகளும் பிரமாண்டமான துரோகம் இழைக்கின்றனர். இதன்மூலம் இராணுவ — பொலிஸ் சர்வாதிகாரம் வளர்ச்சி கண்டு வரும் நிலையில் தொழிலாள வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் அரசியல் ரீதியில் நிராயுதபாணியாக்க இவர்கள் துணைபோகின்றனர்.

கிராமப்புறங்களில் இன்று இடம் பெற்றுவரும் இந்த ஒடுக்கு முறைகளும் படுகொலைகளும் தொழிலாள வர்க்கத்தின் நிச சகாக்களை ஒழித்துக் கட்டி, தொழிலாள வர்க்கக் குடியிருப்புப் பிராந்தியங்களில் இராணுவ — பொலிஸ் ஆளுமையைதிறுவவும், தொழிலாள வர்க்கத்துக்கு எதிரான ஒரு மூற்றுகை நிலைமையைச் சிருஷ்டிக்கவும் உதவுகின்றது.

யுத்தத்துக்குப் பின்னைய செழிப்புக் காலகட்டத்தில் இடம் பெற்று வந்ததைத் தோன்ற தொழிற் சங்கங்களிலு சுதந்திரக் கொடுக்கல் வாங்கல்களுக்கு முடிவுகட்ட ஆளும் வர்க்கம் முடிவு செய்துள்ளதே இதற்கான காரணம். அரசாங்க, கூட்டுத்தாபனத் துறைகளில் 150,000 தொழில்களை அழிக்கவும், ஒரு இலட்சம் தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவுக்கு நாடு கடத்தவும் ஏகாதிபத்திய வங்கியாளர்கள் தயாரித்த அழிவுத்திட்டம் ஏற்கனவே யூ. என். பி. அரசாங்கத்தின் கைகளில் ஒப்படைக்கப்பட்டு, அமுல் செய்யப்பட்டு வருகின்றது. இந்த வேலைத் திட்டத்தினை அமுல் செய்வதில் எந்தவிதமான காலதாமதத்துக்கும் உலக நெருக்கடி ஆளும் வர்க்கத்துக்கு இடமளிப்பதாய் இல்லை.

அணுவாயுத யுத்தத்தின் மூலம் மத்திய கிழக்கு எண்ணெய் கிணறுகளைக் கைப்பற்றும் பொருட்டு ஏகாதிபத்திய வாதிகள் பாரசீக வளைகுடாவில் செய்துகொண்டுள்ள ஆக்கிரமிப்பு தலையீடுகள் ஒருவிதத்தில் இலங்கைப் பொருளாதாரத்தினைப் பொறுத்த மட்டில் பெரும் தாக்கத்தினை உண்டு பண்ணுகின்றது. அத்தோடு தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் தாக்கும் யூ. என். பி.யின் அவஸ்தை நிலையை அதிகரிக்கின்றது.

உரத்தின் விலையை நூற்றுக்கு 400 வீதத்தினால் அதிகரிக்கும் விதத்தில் இதுவரை காலமும் இருந்து வந்த உர மானியம் ஏற்கனவே பறிக்கப்பட்டுள்ளது. கிராமப்புற மக்கள் உயிரைப்பிடித்துக்கொள்ள அவசியமான ஏனைய அத்தியாவசிய சேமநலசேவைகளும், வெகு வேகமாகத் தாக்குதலுக்குள்ளாகி வருகின்றன. அதிகாரத்துவங்களின் துரோகத்திற்கு குறைச்சல் இல்லாவிடினும் இத்துரோகங்களுக்கு எதிராக பொதுமக்களின் எதிர்ப்பு வளர்ச்சி காண்பது உறுதி என்பதைக் கண்ட அரசாங்கம், சோசலிசப் புரட்சியை ஊர்ஜிதம் செய்ய முடியாத நிலைமைகளைச் சிருஷ்டிக்கும் முன்னேற்பாடுகளில் ஈடுபட்டது. கிராமப்புற மக்களுக்கு எதிரான இராணுவ — பொலிஸ் பாய்ச்சல் இந்த யுத்தத்தின் ஓர் அங்கமே.

### புரட்சிகரக் கூட்டு

இந்நிலைமையில் தொழிற் சங்கங்கள் ஒன்றில் முதலாளித்துவ அரசின் 'கோபரேட்வாத' கருவியாக வேண்டும். அல்லது சோசலிசப் புரட்சியின் கருவியாக வேண்டும். இரண்டாவது பாதையை தேர்ந்தெடுப்பதானால் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ தலைவர்களுக்கு எதிராக தொழிலாள வர்க்கத் தலைமையின் கீழ் தொழிலாளர்களுக்கும், கிராமப்புற ஏழைகளுக்கும் இடையே புரட்சிகரக் கூட்டினைக் காலதாமதமின்றிக் கட்டி எழுப்புவது அவசியம்.

அரச படைகளும், குண்டர் கும்பல்களும் இன்று நடாத்தி வரும் படுகொலைப் பயங்கர இயக்கத்தில் இருந்து கிராமப்புற மக்களைக் காப்பாற்றும் பொருட்டு தொழிலாள வர்க்கம் முன்னணியில் நின்று செயற்பட வேண்டும். இத்திசையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காவண்ணம் தொழிலாள வர்க்கத்தினைத் தடை செய்து கொண்டுள்ளவர்களும் தொழிலாள வர்க்கத்தினை அதன் கிராமப்புற ஆதரவாளர்களிடமிருந்து தனிமைப்படுத்தி வைத்திருப்பவர்களும் சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இ. தொ. கா துரோகத் தலைவர்களே. இத்துரோகத் தலைவர்களின் சகல அரசியல் நடவடிக்கைகளும் கிராமப்புற மக்களை முதலாளித்துவ யூ. என். பி, சி. ல. சு, கட்சிகளின் பிடிக்குள் தள்ளி விடுவதாகவே அமைந்துள்ளது. இவர்கள் இன்று ஆரம்பித்துள்ள 'காணாமற்போனவர்களின் பெற்றோர், பிள்ளைகள் இயக்கமானது' சர்வதேச மன்னிப்புச் சபை (அம்னஸ்டி இன்டர்நஷனல்) போன்ற ஏகாதிபத்திய சார்பு இயக்கங்களைப் பற்றிய நப்பாசைகளை வளர்க்கும் மற்றுமோர் பொறிக்கிடங்காகும். இந்த கிராமப்புற படுகொலைகள் இடம் பெற்று வந்த வேளையில் ஏகாதிபத்தியவாதிகளின் பங்களிப்பு — சிறப்பாக இஸ்ரேல் 'மொஷாட்' போன்ற அமைப்புக்களின் பங்களிப்பு — அம்பலமாகியுள்ள இன்றைய சமயத்தில் ஏகாதிபத்தியச் சார்பானதும் முதலாளித்துவ அரசுடன் பிணைக்கப்பட்டதுமான இத்தகைய இயக்கங்களின் தீய செயற்பாடுகள் இரட்டிப்பாகின்றன.

இந்த இயக்கம், இனவாத யுத்தத்தில் காணாமற்போன படையாட்களைத் தேடும் வேலையையும் பொறுப்பேற்றுகொண்டுள்ளது. இதன் மூலம் இந்த மக்கள் முன்னணி பொறிக்கிடங்குக்காரர்கள் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதத்தினைத் தூண்டிவிடவும் மக்களை இராணுவம் — பொலிசுடன் பிணைக்கவும் முயல்கின்றனர். இந்த விதத்தில் இவர்கள் தொழிலாள வர்க்கத்தினை கிராமப்புற மக்களின் கண்களில் அவமரியாதைக்குள்ளாக்கவும், கிராமப்புற ஏழைகளுக்கும் தொழிலாள வர்க்கத்துக்கும் இடையேயான இடைவெளியை அகட்டவும் தொழிற்படுகின்றனர். துரோகத் தலைவர்களின் இந்த வங்குரோத்து நடவடிக்கைகள் எங்கிருந்து ஊற்றெடுக்கிறது? மக்களின் பேரில் அன்றி சர்வாதிகாரத்துக்கான தயாரிப்பில் ஈடுபட்டுள்ள ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ வர்க்கத்தினைக் காக்கும் அவர்களின் மக்கள் முன்னணி அரசியல் வழிமுறையில் இருந்து பெருக்கெடுக்கின்றது.

### தொழிலாளர் பாதுகாப்பு படை

கிராமப்புறப் படுகொலைகளையும் ... சித்திரவதைகளையும் நிறுத்தும் பொருட்டு தொழிலாள வர்க்கம் எடுக்கும் ஆரம்ப நடவடிக்கையானது சகல அரச படைகளையும், அரை — இராணுவ, குண்டர் கும்பல்களையும் களைக்கும்படி நடாத்தும் பிரச்சாரத்துடன் உடன் இணைக்கப்பட்டதாக வேண்டும். இது உயிர்ப் பாதுகாப்பின் பொருட்டு தொழிலாள வர்க்கத் தலைமையின் கீழ் கிராமப்புற ஏழைகளையும் இளைஞர்களையும் சேர்த்து பாதுகாப்பு கமிட்டிகளையும், பாதுகாப்பு படைகளையும் கட்டி எழுப்பும் பிரச்சினையைத் தோற்றுவிக்கின்றது. முதலாளித்துவ அரசினை தூக்கி வீசுவது சம்பந்தமான பொது மக்களின் சிந்தனையை உயர்மட்டத்திற்கு வளர்த்தெடுக்கும் பொருட்டு அரச படைகளதும், குண்டர் கும்பல்களதும் கொலைகாரச் சதிகள் பற்றிய சுயாதீன விசாரணைகளை இந்தப் பாதுகாப்புக் கமிட்டிகள் ஒழுங்கு செய்வது முக்கியமானது.

தொழிலாளர்களை ஆயுதபாணியாக்கு! என்ற கோரிக்கையைச் சகல தொழிலாள வர்க்க அமைப்புக்களின் உள்ளும் எழுப்புவதோடு, இதன் பேரிலான பிரச்சாரத்தின் மூலம் அவசியமான நடைமுறை நடவடிக்கைகளை எடுக்கும்படி தலைவர்களை நெருக்க வேண்டும்.

யூ. என். பி. அரசாங்கமும், முதலாளித்துவ வர்க்கமும் உத்தியோகபூர்வமான அரச படைகளுக்கு மேலதிகமாக ஆயுதம்தாங்கிய அணிகளைக் கட்டி எழுப்பி வருகின்ற நிலையில் இக்கோரிக்கை முற்றிலும் நியாயமானது. சகல யூ. என். பி. தலைவர்களும் தத்தம் குண்டர் கும்பல்களைக் கொண்டுள்ளதோடு, யூ. என். பி. அரசாங்கம் இனவாத யுத்தத்தில் புளொட், டெலோ, ஈ. என். டி. பி மற்றும் தமிழ் குட்டி முதலாளித்துவக் குழுக்களையும் இராணுவத்துக்கு மேலதிகமாக' வெளிவெளியாகவே பயன்படுத்தியும் வருகின்றது.

ஆளும் வர்க்கம் இங்ஙனம் தனியார் குண்டர் கும்பல்களைப் பயன்படுத்தி வருவதானது முதலாளித்துவ ஜனநாயகம் சிதறுண்டு போய்விட்டதை சரியான முறையில் கட்டிக் காட்டுகின்றது. எனினும் சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இ. தொ. கா. துரோகத் தலைவர்கள் ஒரே குரலில் கூறுவது என்ன? மக்கள் முன்னணி அரசாங்கத்தின் மூலம் இங்ஙனம் சிதறுண்டுபோன முதலாளித்துவ ஜனநாயகத்தை மீண்டும் கட்டி எழுப்ப முடியும். இது பயனற்ற முயற்சி மட்டுமன்றி இதனால் தொழிலாள வர்க்கம் நிராயுதபாணியாக்கப்படும்; இதனை வர்க்க நனவு படைத்த எந்தவொரு தொழிலாளியும் புரிந்து கொள்ள முடியும்.

லெனினும் ட்ரொட்ஸ்கியும், ரஷ்ய தொழிலாள வர்க்கத்தின் அனுபவத்தினை பின்வரும் வார்த்தைகளில் விபரித்தார்: "இந்நூற்றாண்டின் முதல் வருடங்களில் ஷார் ருஷ்யாவின் இளம் தொழிலாளி வர்க்கம் மட்டுமே தமது போராளிப் படையணிகளை ஆயுதபாணியாக்கத் தொடங்கியது. இது பழைய அதிகாரத்துவத்தின் ஸ்திரமற்ற தன்மையை நன்கு வெளிக்காட்டியது. பொலிஸ், இராணுவத்தினைக் கொண்ட சாதாரண படையணிகள் மூலம் தொடர்புகளை பராமரித்துக் கொள்ளுவதில் ஷார் மன்னராட்சி மேலும் மேலும் இலாயக்கற்றுப் போனது. ஆதலால் அது 'சுயேச்சை குழுக்களுக்கு' (யூதர்கள், ஆமேனியர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள் ஏனையோர்களுக்கு எதிரான கொலைகளில் ஈடுபட்டுவந்த கறுப்புநூற்றுவர்) மேலும் மேலும் ஆதரவினைத் திரட்டிக் கொள்ள நெருக்கப் பட்டது. இதற்குப் பதிலடியாக பல்வேறு தேசியவாதக் குழுக்களும் அவ்வாறே தொழிலாளர்களும் தத்தம் உயிர்ப் பாதுகாப்பின் பொருட்டு படைஅணிகளை அணிதிரட்டத் தொடங்கினர். இக்காரணி, புரட்சியின் ஆரம்பத்தினைச் சமிக்கை செய்தது." (தொழிலாளர்களின் உயிர்ப் பாதுகாப்பு பற்றிப் பிரச்சினை சம்பந்தமாக)

தொழிலாளர் பாதுகாப்பு அணிகளை ஆயுதபாணிகளாக்க வேண்டும் எனவும் இளைஞர்கள், கிராமப்புற ஏழைகளிடையேயான போராளிகள் இந்த அணிகளின் கீழ் பயிற்சியளிக்கப்படவேண்டும் எனவும் தொழிற்சங்கம் உள்ளடங்கலான தொழிலாளர் அமைப்புக்கள் பிரச்சாரம் செய்ய வேண்டும். ஒழுங்கு முறையாக ஆயுதபாணியாக்கப்பட்ட பாதுகாப்பு அணிகள் இல்லாமல் உயிருக்கு பாதுகாப்பு இல்லை என்பதைத் தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் நன்கு புரிந்து கொள்வார்கள்.

தமது அமைப்புக்களுள் பிரேரணைகளை நிறைவேற்றுவதன் மூலம் இப்பிரச்சினைகளைத் தோற்றுவிக்குமாறும், அவற்றின் தலைவர்கள் முதலாளித்துவக் கட்சிகளுடன் கொண்டுள்ள மக்கள் முன்னணி உறவுகளைத் தகர்க்குமாறும் இவை சம்பந்தமாக உடன் நடைமுறை நடவடிக்கைகள் எடுக்கும்படி நெருக்கும்படியும் தொழிலாள வர்க்கப்போராளிகளை நாம் வேண்டுகின்றோம். சகல தொழிலாள வர்க்க அமைப்புக்களையும், அரசியல் கட்சிகளையும் கொண்ட ஊர்வலம், மறியல்களை ஒழுங்கு செய்யுமாறும், இனவாத யுத்தத்தினையும் கிராமப்புறங்களில் இடம்பெறும் படுகொலைகள், ஒடுக்குமுறைகளையும் நிறுத்தும் பொருட்டுத் தொழிலாளர்கள் தமது அமைப்புக்களுள் பொது வேலை நிறுத்தத்துக்குத் தயார் செய்யும் பிரேரணைகளை நிறைவேற்ற வேண்டும்.

இந்த வேலைத்திட்டத்தினைக் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தொழிலாள வர்க்க அ... புக்களதும் இளைஞர் இ... களதும் பேராளர் மகா... டினை உடன் கூட்ட வேல...

### அனைத்துலக... வேலைத்திட்ட...

ஏகாதிபத்திய வாதிக... அவர்களின் கையாட்க... மூன்றும் உலக யுத்தம், ... யுத்தத் தயாரிப்புக்களுக்... ராக உலகத் தொழிலாள... கத்தின் ஐக்கியத்து... அனைத்துலகவாத வேலை... டத்தின் அடிப்படையில்... டுமே முதலாளித்துவ ... தாக்குதல்களை எதி... தொழிலாள வர்க்கத்... கிளர்ந்து எழ முடியும். ... துலகத் தொழிலாள வ... இந்நாட்டு ஏற்றுமதி... பகிஷ்கரித்தல் உள்ள... கலான தொழிலாள வ... தடைகளை இரத்தம் தே... யூ. என். பி. அரசாங்கத்... எதிராகப் பயன்படுத்த ... டும். இதன் பொருட்டு ... லிசப் புரட்சியின் உலகக்... யான நான்காம் அகில... அனைத்துலகக் குழு ... துலக ரீதியில் நடாத்தி... பிரச்சாரம், உலகத் ... லாள வர்க்கத்தின் ... துலகவாத புரட்சிகர ந... அதிகரிக்கும் பலம் வ... சாதனமாகுவது நிச்சயம்...

இந்தியத் துணைக் க... தில் தொழிலாள வர்க்க... ஐக்கியத்தினை கட்டி எ... பொருட்டு, சிறப்பாக ... சோப லட்சம் கிரா... ஏழைகளிற்கும், ஒடுக்க... தேசிய இனங்களுக்கும்... லை — தமிழ்ஈழம் தொ... ளர்கள் அரசியல் ... வழங்கும் பொருட்டும் ... லாள வர்க்கம் முன்ன... நின்றாக வேண்டும். ... களை மீண்டும் ஒரு முறை... விகளாக்கி, ஏகாதி... சர்வாதிகாரிகளின் ... இலாபத்துக்காக '... வர்த்தக வலயங்கள்' ... கப்பட்டுள்ளன. மு... துவ, குட்டி முதலா... தலைவர்கள் தாமே '... களாக' நின்று ஆரம்பி... இந்தப் பாதைகளை ... மூட வேண்டின் தொ... வர்க்கம் மேற்சொன்ன... திட்டத்துக்காகப் ... யாக வேண்டும்.

இராணுவ-பொலிசி... முறையையும் இனவ... தத்தினையும் ஒழித்து... வதானது, 1948ல் ... பட்ட ஏகாதிபத்திய... முதலாளித்துவ ஆ... தூக்கி வீசுவதுடன் ... கொண்டுள்ளது. இன்... வாதிகாரத் தயாரி... யுத்தத்தின் பின்னை... அமைப்பு சரிந்து ... முதலாளித்துவ சொ... யும் தேசிய அரச அ... முகம் கொடுத்துள்ள... கடியில் இருந்தே தோ... றன.

முதலாளித்துவச் ... முறையையும் முதலா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

து

2-08

...க எடுக்கும் பொருட்டு
...ளாள வர்க்க அமைப்
...ும் இளைஞர் இயக்கங்
... பேராளர் மகாநாட்
...டன் கூட்ட வேண்டும்.

## ...னைத்துலக
## ...லைத்திட்டம்

...பத்திய வாதி களதும்
...ின் கையாட்களதும்
... உலக யுத்தம், இவில்
...தயாரிப்புக்களுக்கு எதி
...லகத் தொழிலாள வர்க்
... ஐக்கியத்துக்கான
...லகவாத வேலைத்திட்
... அடிப்படையில் மட்
...தலாளித்துவ அரசின்
...ல்களை எதிர்த்து
...ாள வர்க்கத்தினால்
... எழ முடியும். அனைத்
... தொழிலாள வர்க்கம்
...டு ஏற்றுமதிகளைப்
...த்தல் உள்ளடங்
... தொழிலாள வர்க்கத்
...ை இரத்தம் தோய்ந்த
... பி. அரசாங்கத்துக்கு
...ப் பயன்படுத்த வேண்
...தன் பொருட்டு சோச
...ரட்சியின் உலகக் கட்சி
...நான்காம் அகிலத்தின்
...லகக் குழு அனைத்
...தியில் நடாத்தி வரும்
...ரம், உலகத் தொழி
... வர்க்கத்தின் அனைத்
...த புரட்சிகர நனவை
...கும் பலம் வாய்ந்த
...ாகுவது நிச்சயம்.

...யத் துணைக் கண்டத்
...ாழிலாள வர்க்கத்தின்
...ந்தினை கட்டி எழுப்பும்
...டு, சிறப்பாக இலட்
... லட்சம் கிராமப்புற
...ளிற்கும், ஒடுக்கப்படும்
... இனங்களுக்கும் இலங்
...தமிழ்ஈழம் தொழிலா
... அரசியல் தலைமை
...ம் பொருட்டும் தொழி
... வர்க்கம் முன்னணியில்
... வேண்டும். இந்நாடு
...ண்டும் ஒரு முறை கால
...க்கி, ஏகாதிபத்திய
...திகாரிகளின் 'சுப்பர்'
...த்துக்காக 'சுதந்திர
...க வலயங்கள்' அமைக்
...டுள்ளன. முதலாளித்
... குட்டி முதலாளித்துவ
...ர்கள் தாமே 'ஜெயிலர்
...' நின்று ஆரம்பித்துள்ள
... பாதைகளை அடித்து
...வேண்டின் தொழிலாள
...ம் மேற்சொன்ன வேலைத்
...த்துக்காகப் போராடி
... வேண்டும்.

...ாணுவ-பொலிஸ் ஒடுக்கு
...ையும் இனவாத யுத்
...யும் ஒழித்துக் கட்டு
...ாது. 1948ல் இணிக்கப்
... ஏகாதிபத்தியச் சார்பு
...ளித்துவ ஆட்சியை
... விசுவதுடன் இணைந்து
...டுள்ளது. இன்றைய சர்
...ாரத் தயாரிப்புக்கள்,
...த்தின் பின்னைய உலக
...ப்பு சரிந்து கொட்டி,
...ளித்துவ சொத்துமுறை
...தசிய அரச அமைப்பும்
... கொடுத்துள்ள நெருக்
...் இருந்தே தோன்றுகின்

...ளாளித்துவச் சொத்து
...ையும் முதலாளித்துவ

அரசையும் காப்பாற்றும் அதே வேளையில் ஜனநாயகத்தை மீண்டும் வளர்த்தெடுக்க முடியும் எனச் சபதம் பூணும் சகல மக்கள் முன்னணி வேலைத்திட்டங்களும் தொழிலாள வர்க்கத்தையும், பொதுமக்களையும் அரசியல் ரீதியில் நிராயுதபாணியாக்குகின்றன. அந்த விதத்தில் இவை பிற்போக்கு இலக்குகளைக் கொண்டுள்ளன. இந்தத் துரோக வேலைத்திட்டங்களுக்கு எதிராக யூ. என். பி.யை வெளியேற்றி, தொழிலாளர்—விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர்வதை இலக்காகக் கொண்ட சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்ட வேண்டும்.

## முதற் கடமை

அத்தகைய ஒரு அரசாங்கத்தின் முதற் கடமை, நீண்ட காலமாக முதலாளித்துவ ஆட்சியினால் நசுக்கப்பட்டு வரும் விவசாயிகளதும் ஒடுக்கப்படும் களை வழங்குவதும் அவசியம். அத்தோடு விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு உத்தரவாத விலையும் வழங்க வேண்டும். விவசாயிகளுக்கு இத்தகைய சலுகைகளை வங்கிகள், கைத்தொழில்கள், மொத்த வியாபாரம், போக்குவரத்து ஆகியனவற்றை நஷ்டஈடின்றி தேசியமயமாக்கும் சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் மட்டுமே வழங்க முடியும். இந்த வேலைத்திட்டத்தின் அடிப்படையிலேயே 20 இலட்சத்துக்கும் அதிகமான வேலையற்றோரின் தொழில் பிரச்சினையைத் (இதில் பெரும்பான்மையினர் கிராமப்புறவாசிகள்) தீர்த்து, சமூக சேமநல சேவைகளை (ஆஸ்பத்திரி, கல்வி சேவைகள்) பாதுகாக்க முடியும்.

பொதுமக்களின் நல்வாழ்க்கையை உத்தரவாதம் செய்யும் பொருட்டு வெளிநாட்டு வர்த்தகத்தில் அரசின் ஏகபோகத்தினை நிலைநாட்டுவதும், அத்தோடு இந்த வேலைத்திட்டத்தினை அமுல் செய்யும் பொருட்டு முதலாளித்துவ அமைப்பினைத் தூக்கி வீசி, தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொணர்வதையும் அவசியமாக்குகின்றது.

அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு அப்பால் இன்றைய பிற்போக்கு ஜனாதிபதி அரசியலமைப்புச் சட்டம் செல்லவில்லை. இதனை அகற்றும் பொருட்டு அரசியல் நிர்ணய சபையைக் கூட்டப் போராடுவது பெரும் முக்கியத்துவம் பெறுகிறது. 1948—49 குடியுரிமை மசோதா, 1947 பொதுஜன பந்தோபஸ்து மசோதா, 1956 சிங்களம் மட்டும் சட்டம், பௌத்தத்தினை அரச மதமாக்கும் 1972 அரசியலமைப்புச் சட்டம், தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்காக நின்றுவரும் அரசியல் கட்சிகளை தடை செய்த 1983ன் 6வது அரசியலமைப்புச் சட்டம், பயங்கரவாத தடைச் சட்டம் ஆகிய பிற்போக்கு அரசியலமைப்புச் சட்டங்களையே இது உள்ளடக்கிக் கொண்டுள்ளது. இச்சகல ஒடுக்குமுறைச் சட்டங்களையும் அகற்றி, தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை, தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை உள்ளடங்கலான தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளை உத்தரவாதம் செய்யும் அரசியலமைப்பினை வரையும் பொருட்டு அரசியல் நிர்ணய சபையைக் கூட்ட வேண்டும். இதற்கு தொழிலாள வர்க்கம் முன்னணியில் நின்று போராட வேண்டும்.

லாள வர்க்கப் புரட்சிக் கட்சியின் தலைமையை வேண்டி நிற்கின்றது. தொழிலாள வர்க்க அனைத்துலக வாதத்தினையும் உலக சோசலிசப் புரட்சியையும் அடிப்படையாக கொண்ட அத்தகைய ஒரு கட்சியின் தலைமையினால் மட்டுமே துரோக அதிகாரத்துவங்களாலும் தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்தின் குட்டி முதலாளித்துவ தலைமைகளாலும் ஆதரவாதானத்தில் தள்ளப்பட்ட தொழிலாள வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் அதிலிருந்து மீட்பதற்கான பாதையைத் தயார் செய்யும் பொருட்டு தொழிலாள வர்க்கத்தின் ஆக்க, அழிவு சக்தியை வழிநடாத்த முடியும். இந்தவேலைத் திட்டத்தினை நடைமுறைப் படுத்தும் பொருட்டு தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் புரட்சிகரக் கூட்டுக்காக இலங்கை—தமிழ்ஈழம் தொழிலாளர்களின் புரட்சிக் கட்சியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே போராடி வருகின்றது.


இந்த வேலைத்திட்டத்தினை ஊர்ஜிதம் செய்யும் பொருட்டு நடாத்தும் போராட்டத்தில் தொழிலாள வர்க்கம், சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ — இ.தொ.க—மத்தியவாத கடைகெட்ட தலைவர்களுடன் கட்டாயமாக மோதிக் கொள்ள நேரிடும். ஆதலால் அந்தச் சகல துரோகத் தலைவர்களையும் அரசியல் ரீதியில் துடைத்துக் கட்டும் பொருட்டு தொழிலாள வர்க்கம் கிளர்ந்து எழ வேண்டும். அத்தகைய கிளர்ச்சி எழுச்சியில்லாமல் எவ்வளவுதான் வேண்டுகோள் விடுத்தாலும் இந்த வர்க்கச் சமரசத் தலைவர்களின் பயணத் திசையை மாற்றவே முடியாது. இதற்குக் காரணம், அவர்கள் தலை முதல் கால் வரை முதலாளித்துவ சொத்து முறையுடனும், இனவாத தேசிய அரச அமைப்புடனும் தம்மைப் பிணைத்துக் கொண்டுள்ளதே.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், உலக சோசலிசப் புரட்சியின் கட்சியான அதனுடன் இணைந்து கொள்ளும்படி தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் வேண்டுகின்றது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இந்தியாவில் உள்ள அதனது தோழமைக் கட்சியான சோசலிச தொழிலாளர் கழகத்துடன் சேர்ந்து இலங்கை—தமிழ் ஈழ சோசலிசக் குடியரசினை உள்ளடக்கிய இந்தியத் துணைக்கண்ட சோவியத் சோசலிச ஒன்றியத்தினை அமைக்கப் போராடுகின்றது. அது மட்டுமே ஒடுக்கப்படும் தேசிய இனங்களதும் கிராமப்புற விவசாயிகளதும் ஜனநாயகக் கோரிக்கைகளுக்குத் தீர்வு கண்டு சோசலிச வேலைத்திட்டத்தினை அமுல் செய்ய நடவடிக்கை எடுக்கும்:

- கிராமப்புற ஏழைகள் படுகொலை செய்யப்படுவதை நிறுத்து! அரசியல் கைதிகளை விடுதலை செய்!
- தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான இனவாத யுத்தத்தினை நிறுத்தி, வட—கிழ் மாகாணங்களில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!
- தொழில், சேம நல சேவைகளை ஒழிக்கும் உலக வங்கி திட்டத்தை தோற்கடி!
- பொது வேலைநிறுத்தத்தினை ஒழுங்கு செய்!
- தொழிலாளர் பாதுகாப்பு கமிட்டிகளையும் பாதுகாப்பு படை அணிகளையும் கட்டி எழுப்பு! தொழிலாளர்களை ஆயுதபாணியாக்கு!
- ஒடுக்குமுறைச் சட்டங்களை நீக்கும் பொருட்டு அரசியல் நிர்ணய சபையைக் கூட்டு!

வங்கிகள், தோட்டங்கள் கைத்தொழில்கள், மொத்த வியாபாரங்களை நஷ்டஈடு இல்லாமல் தொழிலாளர் கட்டுப்பாட்டின்கீழ் தேசியமயமாக்கு!

- விவசாயிகளுக்கு நிலம்! விவசாயிகளின் கடன் பழுவை அகற்று!
- தொழிலற்ற சகலருக்கும் தொழில்!
- தொழிலாள வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியம்!
- இலங்கை — தமிழ் ஈழம் சோசலிச சோவியத் ஒன்றியத்தினை நோக்கி முன்னேறு!
- நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கை கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை கட்டி எழுப்பு!




இலங்கை இனவாத அரசின் படுகொலைகளுக்கு எதிராக அமெரிக்க ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் ஆர்ப்பாட்டம்.

தமிழ் தேசிய இனத்தினதும் ஜனநாயக உரிமைகளை உத்தரவாதம் செய்வதாகும். ஒடுக்கப்படும் தேசிய இனங்களைப் பொறுத்தமட்டில் பிரிந்து சென்று வேறான ஓர் அரசினை அமைப்பது உட்பட்ட சுயநிர்ணய உரிமையைப் பாதுகாக்க தொழிலாள வர்க்கம் சபதம் பூண வேண்டும். கிராமப்புற விவசாயிகளைப் பொறுத்த வரையில் தொழிலாள வர்க்கத்தின் சபதத்துக்கு இன்றியமையாமல் பரந்த தோட்டங்களைத் தொழிலாளர் நிர்வாகத்தின் கீழ் பராமரிப்பதோடு நிலத்தைத் தேசியமயமாக்கும் திட்டத்தின் கீழ் பயிர் செய்வோருக்கு நிலத்தை உத்தரவாதம் செய்து வழங்கல் உள்ளடங்க வேண்டும். முதலாளித்துவ விவசாய இயக்கத்தினை ஆரம்பிக்கும் பொருட்டு முன்னர் இருந்து வந்த நிலமானித்துவ உடமைகளை ஒழித்து, நிலத்தை கவிகரித்த முதலாளி வர்க்கம், இன்று நிலமற்ற விவசாயிகளின் நலன்களை இட்டு நிரப்புவதற்கு முழுமையான எதிரியாக உள்ளது.

கிராமப்புற ஏழைகளின் இன்றைய சகல கடன் சுமைகளையும் போக்குவது மற்றுமோர் பிரமாண்டமான தேவையாகும். இலகுவான கடன் வசதிகளை செய்வதும் குறைந்த விலையில் பசளை, விதை நெல், கிருமி நாசினிகள், விவசாய இரசாயனப் பொருட்கள், ட்ராக்டர்

இது விவசாயிகளின் பிரமாண்டமான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பிரச்சினை சோசலிச வேலைத்திட்டத்துடனும் தொழிலாள வர்க்கம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதுடனும் எவ்வளவு தூரம் நெருக்கமாக இணைந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது: இது தனியார் விவசாயத்தில் ஈடுபடும் விவசாயி சிறிய இரும்புத் துண்டினைக் கவரும் காந்தம் போல் முதலாளித்துவ உற்பத்தி முறையினால் ஈர்க்கப்பட்டமை கிராமப்புறத்தில் ஏற்பட்டுள்ள பரந்த மாற்றத்தின் பெறுபேறாகும். இந்த மாற்ற மடைந்த நிலைமையில் புரிந்து கொள்ள வேண்டிய தவிர்க்க முடியாத அரசியல் முடிவு: சோசலிசத்துக்கான போராட்டத்தில் விவசாயிகளுக்குத் தொழிலாள வர்க்கம் வழங்க வேண்டிய சுயாதீனமான தலைமையின் தீர்க்கமான வரலாற்று அவசியம்.

## அரசியலமைப்பு

பொதுமக்களை நசுக்கும் பொருட்டு ... ஏகாதிபத்திய ... வரையப்பட்ட பிற்போக்கு அர

## சோவியத்துகளைக் கட்டி எழுப்புதல்

இந்த வேலைத்திட்டத்தினை ஊர்ஜிதம் செய்யும் பொருட்டு ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டி, சோவியத்துக்களைச் கட்டி எழுப்புவதற்கு தொழிலாள வர்க்கத்தினை அணிதிரட்ட வேண்டும். தொழில், மற்றும் தொழிலாளர் உரிமைகளைக் காக்கும் பொருட்டு அமைக்கப்படும் பக்டரி கமிட்டிகளதும் அரச படைகள், குண்டர் கும்பல்களில் இருந்து பொது மக்களைக் காக்கும் பொருட்டு அமைக்கப்படும் பாதுகாப்பு கமிட்டிகளதும் நடவடிக்கைகளை அரசியல் ரீதியாக வழிநடாத்திக் கொண்டு தொழிலாளர், விவசாயிகள் சோவியத்துக்கள் செயற்படத் தொடங்குகின்றன. தொழிலாளர் வர்க்கத்தினை அரச ஆட்சியின் சக்தி அமைப்பாகப் பரிமாற்றம் செய்யும் பொருட்டு செயற்படுதலே சோவியத்... ... வேலைத்திட்டமும் தீர்க்கமான முறையில் தொழி

## வாசியுங்கள்

- ருஷ்யாவில் நடப்பதென்ன? — விலை 5/50
  கொர்பச்சேவும் ஸ்டாலினிசத்தின் நெருக்கடியும்
- பெப்ரவரி 25ன் பின்னைய நிகரகுவாவின் படிப்பினைகள் — விலை 5/50
- தோழர் கீர்த்தி பாலசூரியவின் நினைவு நீடுழி வாழ்க! — ரூபா. 10/-

தொடர்பு:
**ஆனந்த வக்கும்புர**
90, 1வது மாளிகாகந்த லேன்,
கொழும்பு — 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளைகுடாவில் இலட்சக்கணக்கானோர் அமெரிக்க இராணுவத்தால் படுகொலை

# மாபெரும் படுகொலைகளுக்கு புஷ் குற்றவாளி

வளைகுடா யுத்தத்தில் ஈராக் படைகளுக்கு அமெரிக்கா தொடுத்த காட்டுமிராண்டித் தாக்குதல்களின் பரிமாணம் அம்பலமாகத் தொடங்கியுள்ளது. குவைத்தைச் சாட்டாகக் கொண்டு இரத்தம் தோய்ந்த யுத்தத்தின் திட்டமிட்டமை, ஒழுங்கு செய்தமைக்கு புஷ்சும் பென்டகனும் குற்றவாளிகள். ஈராக்கிய இராணுவத்தை அழித்தொழிப்பதும், ஈராக்கிய சனத்தொகையில் கணிசமான பகுதியினரை ஒழித்துக் கட்டுவதும் இவர்களின் நிச இலக்காக விளங்கியது.

கடைகெட்ட பத்திரிகைகளின் ஆதரவுடன் புஷ் நிர்வாகமும், பென்டகனும் இன்று ஈராக்கிய அழிவுகளின் பரிமாணத்தினை மூடிமறைக்கும் ஒழுங்குமுறையான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. எந்தவொரு கொலையாளியைப் போல் இவர்களும் தமது குற்றங்களின் சாட்சியங்களை ஒழித்துக்கட்ட முயன்று வருகின்றனர். ஆனால் உண்மை வெளிப்பட அதிக காலம் செல்லாது: அமெரிக்க மக்களின் பேரால் இழைக்கப்பட்ட சகல பயங்கரங்களையும் அமெரிக்கத் தொழிலாள வர்க்கம் கண்டுபிடிக்கும்.

ஈராக்குக்கு எதிரான அமெரிக்க யுத்தம் இந்த 20 வதாம் நூற்றாண்டின் படுபயங்கரமான அட்டூழியங்களில் ஒன்றாகும். இந்த மனிதப் படுகொலையை எதிர்காலச் சந்ததியினர் அவமானத்துடன் நோக்குவர். ஜனநாயக அமெரிக்கா எனப்படுவதன் ஆளும் வர்க்கம், நாஸிகளைப் போன்று பரந்தளவிலான படுகொலைகளுக்கு இலாயக்கானது என்பதை வெளிக்காட்டிக் கொண்டுள்ளது.

வெகுஜனத் தொடர்புச்சாதனங்கள் தொடர்ந்தும் ஏகாதிபத்திய சார்பு பிரச்சார ஊளையிடுகின்றன. இது யுத்தத்தின் தொடர்ச்சியான இலட்சணமாக விளங்கியது. இப்போது இவை குவைத்திலான ஈராக்கிய அட்டூழியங்கள் பற்றி ஊளையிடுகின்றன. சதாம் ஹுசேன் படையினரால் என்னதான் செய்யப்பட்டாலும்— அவற்றுக்கு இன்னமும் சாட்சி இல்லாததோடு — அவற்றை அமெரிக்க ஏகாதிபத்தியப் படைகள் நடாத்தியுள்ள வரைபறையற்ற கொலைகள் தாண்டிவிட்டன.

நிச கொலைகள் 5 இலட்சத்தினை எட்டிவிட்டன. பெப்ரவரி 28ம் திகதி வெளியான ஒரு அறிக்கையின் படி குவைத்திலும் தெற்கு ஈராக்கிலும் இருந்துவந்த 620,000 ஈராக்கியப் படைகளில் 20,000 படையினர் மட்டுமே ஒழுங்கு செய்யப்பட்ட யூனிட்டுகளில் எஞ்சியிருந்தனர். (வியாழனன்று 'பெப்ரவரி 28) அமெரிக்காவின் யுத்த நிறுத்த அறிவிப்பு வெளியான காலை 8 மணிக்கு நிலை இதுவே. குடியரசுப் படைப்பிரிவின் கடைசி 'யூனிட்' உட்பட பஸ்ராவுக்கு தெற்கே இருந்த ஈராக்கிய இராணுவத்தின் 42 படைப் பிரிவுகளும் அடியோடு அழிக்கப்பட்டுவிட்டன. பத்திரிகைச் செய்தியின்படி 'பெருவாரியான இடர்ப்பாடுகளுக்கு இடையிலும் அவை கடும் தாக்குதலில் ஈடுபட்டன.''

எவ்வளவு ஈராக்கிய படையினர் படுகொலைசெய்யப்பட்டனர் என்பது தெரியவில்லை. ஜெனரல் நோர்மன் ஸ்கோபாஸ்கின் படி இது ஒருபோதும் தெரியவராது. அவர்களின் சடலங்கள் சுட்டெரிக்கப்பட்டன. பெரும் புதைகுழிகளில் புதைக்கப்பட்டன. அல்லது குண்டு வீச்சுகளுக்கு இலக்கான நிலவறைகளில் பாலைவன மணலில் சும்மா விடப்பட்டன. நோர்மன் ஸ்கோபாஸ்கிடம் குவைத்தில் உள்ள ஈராக்கிய படையாட்களின் எண்ணிக்கைக்கும் அமெரிக்கா தலைமையிலான படைகளால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கைக்கும் இடையேயான வித்தியாசத்தைக் கேட்ட போது அவர் கூறியதாவது: ''இந்த யூனிட்டுகளில் மிக, மிகப் பரந்தளவிலான எண்ணிக்கையானோர் கொல்லப்பட்டுள்ளனர். ஒரு மிக, மிகப் பரந்தளவிலான மரணங்கள்.'' என்றார்.



ஜோர்ஜ் புஷ்



சதாம் ஹுசேன்

### 'விடுதலை'

சண்டையிலிருந்து தப்பி வடக்குப் புறமாகத் தப்பியோட முயன்ற படையாட்கள் ஈவிரக்கமின்றித் தாக்கப்பட்டனர். ஈராக்கியப் படைகளை அகற்றுவதற்கான பிரதான பாதையாக விளங்கிய குவைத் நகருக்கும் பஸ்ராவுக்கும் இடையேயான வழியில் விமானம் ஓட்டிக் கொண்டிருந்த விமானிகள் குண்டுவீச்சையும், துவக்குச் சூட்டையும் ''செம்மறியாட்டு கூட்டத்தின் மீதான தாக்குதல்'' என வருணித்தனர்.

நான்கு வழிகளால் இணைக்கப்பட்டிருந்த ஒரு வீதியில் பயணம் செய்து கொண்டிருந்த வாகனங்கள் மீது பி 52 விமானங்கள் 1000 ரூத்தல் எடையுள்ள 'காபட்' குண்டுகளை பொழிந்தன. அத்தோடு 'லேசரினால் வழிகாட்டப்பட்ட ஏவுகணைகளும் 'ஸ்மாட்' குண்டுகளும் ஒன்றன்பின் ஒன்றாக இவற்றைக் தாக்கின.

ஏகாதிபத்திய இராணுவத்தின் உபாயம், குவைத்தை 'விடுதலை' செய்வதன்றி ஈராக்கிய இராணுவத்தை உடல்ரீதியாக அழித்தொழிப்பதும் ஒரு நவீன அரசு என்ற வகையில் அதை ஒழித்துக்கட்டுவதுமே என்பது அம்பலமாகியது:

ஒரு இலட்சத்துக்கும் அதிகமான குண்டுகளுடன் யுத்த வரலாற்றிலேயே 6 கிழமைகள் இடம் பெற்ற இந்த பேரழிவு மிக்க விமானக் குண்டு வீச்சில் ஈராக்கின் பொருளாதாரக் கட்டுமானம் நிர்மூலமாக்கப்பட்டதோடு நாட்டின் பெரும் பகுதி 19ம் நூற்றாண்டு நிலைமைக்கு தரமிறக்கப்பட்டது. மின்சாரம், தண்ணீர் இல்லாமலும் வைத்திய வசதிகள் அல்லது அடிப்படை சுகாதார வசதிகள் இல்லாமலும் செய்யப்பட்டது.

### நாபாம் குண்டுகள்

குவைத்திலும், தெற்கு ஈராக்கிய இராணுவ நிலைகள் மீது ஒரு கிழமை தொடர்ந்து இடம் பெற்ற குண்டுவீச்சில் நாபாம்: எரிவாயு குண்டுகளும் வியட்னாமில் இறுதியாகப் பயன்படுத்தப்பட்ட 15000 இறாத்தல் குண்டுகளும் ஈராக்கிய எல்லைப் படைகள் மீது பொழியப்பட்டன. ஆகாயச் சண்டை தொடங்குவதற்கு முன்னர் 200,000 ஆக இருந்த இப்படைகள் அமெரிக்க தரைப்படைகள் ஆக்கிரமிப்பை ஆரம்பித்ததும் 50 வீதத்தினால் குறைக்கப்பட்டன.

தரைச் சண்டையானது அமெரிக்க ஏகாதிபத்தியம் 1945 ஆகஸ்ட் 4—6ம் திகதிகளில் ஹிரோசிமா, நாகசாகி நகரங்களில் அணுகுண்டு வீசி, இலட்சக்கணக்கான ஜப்பானிய மக்களை நிர்மூலமாக்கிய இரத்தம் தோய்ந்த யுத்தத்துக்கு சமானமாக விளங்கியது

பெப்ரவரி 27ம் திகதி ஜோர்ஜ் புஷ் வெளியிட்ட தற்காலிக யுத்த நிறுத்த அறிவிப்பில் ''எமக்கு ஈராக்கிய மக்களுடன் எவ்வித தகராறும் இடையாது.'' என பிரகடனம் செய்தார். இந்த நயவஞ்சகமான உத்தரவாதம், அமெரிக்க ஏகாதிபத்திய யுத்த இயந்திரத்திடம் தமது சகோதரர்களையும், தந்தையர்களையும், குழந்தைகளையும் பறிகொடுத்த ஈராக்கிய மக்களின் கொதிப்பை பெருமளவில் அதிகரிக்கச் செய்யும். ஈராக்கிய மக்கள் பற்றிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நிச மனப்பாங்கினை பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசிய ஸ்பாஸ்கோவ் வெளியிட்டான்: ''அவர்கள் இந்த மனித இனத்தின் ஒரு பகுதியினர் அல்ல.''

பென்டகனதும் வெள்ளை மாளிகையினதும் வெற்றிப் பிரதாபங்களுக்கு மத்தியிலும்; இலட்சோப லட்சம் ஈராக்கிய மக்களை 'கிளஸ்டர்' குண்டுகள் மூலமும், ஏவுகணைகள் மூலமும், ஹெலிகொப்டர்கள், டாங்கிகள், மற்றும் நவீன ஆயுதங்கள் மூலமும் கொன்றுதள்ளியதால் எதுவித பெருமையோ அல்லது கௌரவமோ கிடையாது. நாசிகள் தமது 'ஸ்டாலின்' குண்டுகளையும், ஏவுகணைகளையும் போலந்து மக்களுக்கு எதிராக அனுப்பியதன் பின்னர், ஒரு ஏகாதிபத்தியம், சக்தி குறைந்த ஆயுதபலம் கொண்டதும், முற்றிலும் பாதுகாப்பற்றதுமான ஒரு எதிரிக்கு எதிராக ஒருதலைப் பட்சமானதும் இரக்கமற்றதுமான படுகொலைகளை நடாத்தியது இல்லை.

குவைத்தில் இருந்து வாபஸ் பெறுவதாக ஈராக் தொடர்ந்து விடுத்து வந்த வாக்குறுதிகளை நிராகரித்த வண்ணமே புஷ் நிர்வாகம் இந்தத் தரைச் சண்டையை நடாத்தியது. ஈராக் வழங்கிய ஒவ்வொரு வாக்குறுதிக்கும் பதிலாக அமெரிக்க ஏகாதிபத்தியம் புதிய புதிய நிபந்தனைகளை விதித்தது. அத்தோடு யுத்த இலக்குகளை விஸ்தரித்தது. இந்தத் தரைச் சண்டை ஆரம்பமாகுவதற்கு முன்னர் 'நியூஸ்வீக்' சஞ்சிகை தனது அமெரிக்க சோவியத் இராஜதந்திரம் பற்றிய வாராந்த அறிக்கையில் கூறியதாவது: ''எவ்வாறெனினும் ஆரம்பத்தில் இருந்தே ஜோர்ஜ் புஷ்சுக்கு இருந்து வந்த பிரச்சினை, சோவியத் திட்டத்தை ஏற்றுக்கொள்வதன்றி தனது நேச அணியினர் யுத்தத்தின் இறுதி. தீர்க்கமான கட்டத்தை அடையும் விதத்தில் அதை ஒதுக்கித் தள்ளுவது எப்படி என்பதாகவே இருந்தது. வெள்ளிக்கிழமை காலை ஈராக்குக்கு புஷ் விடுத்த காலக்கெடு ஏற்றுக் கொள்ள முடியாதது என்பதைக் கருதியது.''

அமெரிக்க அரசாங்கத்தின் இலக்கு இலட்சோப இலட்சம் ஈராக்கிய படையினரை அழிப்பதும் ஈராக்கிய இராணுவ பலத்தை நிர்மூலமாக்குவதும், ஈராக்கின் பரந்த பிராந்தியத்தினைக் கைப்பற்றுவதுமே. இதனை ஸ்வாஸ்கோ பத்திரிகையாளர் மகாநாட்டில் பின்வருமாறு ஊர்ஜிதம் செய்தான்: 'குவைத்தில் இருந்து ஈராக்கை வெளியேற்றுவதை விட இந்த யுத்தத்துக்கு ஒரு தொகை நோக்கங்கள் உள்ளன.'' என்றான்

### தட்சர்

'டைம்' சஞ்சிகையில் வெளியான ஒரு அறிக்கையின் படி யுத்தம் தொடங்குவதற்கு முன்னரே இராணுவ ரீதியில் ஈராக்கை நிர்மூலமாக்கும் திட்டங்கள் வெளியிடப்பட்டிருந்ததை மத்திய கிழக்குக்கான சோவியத்தின் பிரதான தூதுவர் யெவ்கெனி பிரிமகோவ் குறிப்பிட்டுள்ளார். பிரிமகோவ் 1990 அக்டோபரில் பிரித்தானியப் பிரதமர் தட்ச்சருடன் இடம்பெற்ற ஒரு சந்திப்பைக் குறிப்பிட்டுள்ளார். அதில் தட்ச்சர் ''ஈராக்கிய படைகளை குவைத்தில் இருந்து வாபஸ் பெறுவதுடன் விடயங்களை மட்டுப் படுத்திக்கொள்ளக்கூடாது சதாமின் 'முதுகெலும்பை முறிக்கும்' விதத்தில் ஒரு பேரழிவுமிக்க தாக்குதலை நடாத்தி முழு இராணுவத்தையும் அத்தோடு கைத்தொழில்களையும் அந்நாட்டின் வளங்களையும் நிர்மூலமாக்க வேண்டும்.'' என்றான்:

### கொர்பச்சேவ்

பிரிமகோவின்படி 'திருமதி தட்ச்சர் எந்தவொரு வார்த்தையும் உழறவில்லை. இந்த நோக்கில் எவரும் தலையிடக்கூடாது என அவள் பிரகடனம் செய்தாள்.'' எனவே ஐக்கிய நாடுகள் சபையின் சோவியத் பிரதிநிதிகளை, இராணுவ நடவடிக்கைக்கு அங்கீகாரம் வழங்கி, வாக்களிக்குமாறு கொர்பச்சேவ் கட்டளையிட்டார். ஏகாதிபத்தியச் சக்திகள் ஈராக்கினை நிர்மூலமாக்கவும், ஒரு புதிய காலனித்துவ ஆதிக்கத்தினை மத்திய கிழக்கில் திணிக்கவும் முயற்சி எடுக்கப்படுவதை கொர்பச்சேவ் நன்கு அறிந்திருந்தார்.

ஈராக்கிய இராணுவம் நாசமாக்கப்பட்டதில் இருந்து மத்திய கிழக்கில் 'சமாதானத்துக்கு, வழிபிறந்துள்ளதாக புஷ் நிர்வாகமும, முதலாளித்துவப் பத்திரிகைகளும் தம்பட்டம் அடித்துக் கொண்டுள்ளன இது ஓர் பொய். வளைகுடா யுத்தம், எதிர்கால யுத்தங்களுக்கான ஓர் ஒத்திகை மட்டுமே. அது இலட்சோப இலட்சம் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் மரணம், பேரழிவுக்குள் தள்ளிவிட அச்சுறுத்திக் கொண்டுள்ளது.

அமெரிக்கத் தொழிலாள வர்க்கம் இரத்தம் தோய்ந்த ஆளும் வர்க்கத்தில் இருந்து தன்னை பிரித்துக்கொள்வதோடு அமெரிக்க இராணுவவாதத்தின் வெடிப்பு தனது உரிமைகளுக்கு உயிராபத்தானது என்பதை அங்கீகரிக்க வேண்டும். அத்தகைய ஒரு படுபயங்கரமான அக்கிரமத்துக்குக் குற்றவாளியான ஒரு நாட்டில் ஜனநாயகம் உயிர் பிழைக்க முடியாது.

அமெரிக்க ட்ரொட்ஸ்கிசக் கட்சியான வேர்க்கஸ் லீக்' வளைகுடா யுத்தத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இராணுவ தாக்குதல்களுக்கு எதிராக ஈராக்கிய, அராபிய வர்க்கச் சகோதரர்களைக் காக்கும் பொருட்டு அமெரிக்கத் தொழிலாளர்களை அணிதிரட்டப் போராடியது. ஆளும் வர்க்கச் சதியை 'அம்பலப்படுத்தும் பொருட்டு வேர்க்கஸ்லீக' வளைகுடா யுத்தம் பற்றிய ஒரு கருத்துக் கணிப்பு நடாத்தப்பட வேண்டும் எனக் கோரியது. ஜோர்ஜ் புஷ்சின் கூட்டுச் சதிகாரர்களான ஜனநாயகக் கட்சியில் இருந்து பிரிந்து ஒரு சுயாதீனமான 'லேபர் கட்சியை' அமைக்கும்படி தொழிலாளர்களை வேர்க்கஸ் லீக் கோரி வந்தது.

★ ஈராக்குக்கு எதிரான ஆக்கிரமிப்பை நிறுத்து! பொருளாதாரத் தடையை நிறுத்து! ஈராக்கிய யுத்தக் கைதிகள் அனைவரையும் திருப்பிக்கொடு!

★ அமெரிக்க படைகள், கப்பல்கள், டாங்கிகள்; விமானங்கள் அனைத்தையும் ஈராக், மத்திய கிழக்கிலிருந்து உடன் வாபஸ் பெறு!

★ தொழிலாளர்களை புஷ் நிர்வாகத்துக்கும் முதலாளித்துவச் சுரண்டலுக்கும் எதிராக அணிதிரட்டு! ஒரு 'லேபர்' கட்சியை கட்டி எழுப்பு! ஒரு தொழிலாளர் அரசாங்கத்துக்கும் சோசலிச கொள்கைகளுக்கும் போராடு!

★ தொழிலாள வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியம்! உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டேல், நவசமசமாஜக் கட்சியுடன் புதிய எதிர்ப்புரட்சிக் கூட்டு

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கழகத்தின் முக்கிய அங்கத்தினர்களில் ஒருவருமான எச் எம். பி. ஹேரத்துக்கு எதிராக நிர்வாகம் குற்றப் பத்திரிகை சமர்ப்பித்த வேளையிலேயே ந. ச. ச. க. தலைவர்கள் மத்திய வங்கி அதிபதியுடன் பேச்சு வார்த்தைக்குச் சென்றனர் ஹேரத்துக்கு எதிரான இந்த வேட்டைக்கு எதிராக எதிர்ப்புக் காட்டவும் ந. ச. ச. க செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன மறுப்புத் தெரிவித்ததன் பின்னரே இச்சந்திப்பு இடம்பெற்றது. கடந்த வருடம் பு. க. க குழுவுக்கு எதிராக சங்கத் தேர்தலில் போட்டியிட்ட ந.ச.ச. க—சி.ல.க.க. குழுவுக்கு மத்திய வங்கி அதிபரும், யூ. என். பி. குண்டர்களும் வெளிவெளியாகவே ஆதரவளித்தனர். தொழிற்சங்க இயக்கத்தினுள் ந.ச.ச.க. தலைமையின் அசிங்கமான — நாற்றம் கண்ட அறிக்கையை இக்கட்டுரையின் எல்லைக்குள் விபரித்துவிட முடியாது.

யூ. என். பி. அரசாங்கம் தொடர்ந்து நடாத்திவரும் இராமப்புற படுகொலைகளுக்கு நவசமசமாஜ மத்தியவாதிகள் சமசமாஜ—கம்யூனிச தலைமைகளுடன் அரசியல் ரீதியில் கூட்டுப் பொறுப்பேற்க வேண்டும். 1988 டிசம்பர் தொடக்கம் அரச பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் ஜே. வி. பி.பாசிச பயங்கரங்களுக்கும் எதிராக சகல தொழிலாளர் அமைப்புக்களையும் கொண்டு தொழிலாளர் ஐக்கிய முன்னணி ஒன்று அமைக்கப்படவேண்டும் என பு க. க. முன்வைத்த யோசனையை ந. ச. ச. க தலைமை முழுமனே எதிர்த்தது. இதற்கு மாறாக ந. ச. ச. க பொதுச் செயலாளர் செய்த சிபார்சு என்ன தெரியுமா? ஸ்ரீலங்கா மக்கள் கட்சியுடன் அவர்கள் உருவாக்கிக் கொண்டிருந்த மக்கள் முன்னணியில் பு. க. க. சேரவேண்டும் என்பதே. இந்தக் கடைகெட்ட சிபார்சினைக் கொண்ட கடிதம் 1989 ஜனவரி 5ம் திகதி பு. க. க. பொதுச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. மறுபுறத்தில் அவர்கள் தமது ''பாதுகாப்பினை'' ஊர்ஜிதம் செய்யும் பொருட்டு ஜயவர்தன அரசாங்கத்திடமிருந்து ஆயுதம் பெற்றுக் கொண்டனர். ஜே. வி. பி.யின் பாசிச இயக்கம் பலமடைந்து வருவதாக தோன்றிய வேளையில் இவர்கள் அதனது 'வேலை நிறுத்த இயக்கத்துக்கு' ஆதரவளித்தனர்.

தொழிலாள வர்க்கம் நடைமுறை ரீதியான பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தடை செய்யும் சமசமாஜ, கம்யூனிச, இ. தொ. கா. தலைவர்களுடன் சேர்ந்து ந.ச.ச.க. தலைவர்களும் தொழிற்பட்டதாலேயே ஜே. வி. பி.யை ஒழிக்கும் பேரில் இலட்சத்துக்கும் அதிகமான இளைஞர்களை கொலை செய்யவும் ஆயிரக் கணக்கானோரை சிறைகளில் தள்ளவும், கொலைகாரக் கும்பல்கள் மூலம் பயங்கர ஆட்சியை தொடர்ந்து நடாத்தவும் பிரேமதாச அரசாங்கத்துக்கு வாய்ப்புக்கிட்டியது.

சிறப்பாக கிராமப்புறங்களில் இடம்பெற்ற இந்த மாபெரும் கொலைகளுக்கு எதிராகப் பொதுமக்களிடையே எதிர்ப்பு வளர்ச்சி கண்டு வந்த நிலையிலேயே ந. ச. ச க. தலைவர்கள், முதலாளி வர்க்கத்துக்கும் அரசாங்கத்துக்கும், அரச படைகளுக்கும் எதிராகத் தொடுக்கப்படுவதை ஸ்தம்பிக்க வைக்கவே 'காணாமற் போனவர்களின் பெற்றோர், பிள்ளைகள் இயக்கத்தை' அமைக்கச் செயற்பட்டனர். யூ. என். பி. அரசாங்கத்தின் இரத்தம் சிந்தும் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் அவசியத்தைத் கொண்டிருந்த பெற்றோர், இளைஞர்களை பிரேமதாச அரசாங்கத்திடமும் ஏகாதிபத்திய அமைப்புக்களிடமும் உதவி தேடத் திருப்புவதில் ந. ச. ச. க. தலைமைகள் இந்த அமைப்பினைப் பயன்படுத்தி வருகின்றனர். 'அம்னஸ்டி இன்டர் நஷனல்' போன்ற அமைப்புக்களைக் கொண்டு ஏகாதிபத்திய ஆட்சியாளர்களுக்கு நெருக்குவாரம் கொடுப்பதன் மூலம், பிரேமதாச அரசாங்கத்தினை எச்சரிப்பது ந.ச.ச.க. தலைவர்கள் இந்த, அமைப்புக்களுக்குவழங்கியுள்ள ஒரு 'வேலைத்திட்டமாகும்', இன்று இந்தஅமைப்பு கொலைகளில் ஈடுபட்டுள்ள பிரேமதாச அரசாங்கத்தின் ஆதரவினைப் பெற்றுள்ளது: ந. ச. ச. க.வினால் பிரசுரிக்கப்படும் 'ஹரய' பத்திரிகையின் 1990 நவம்பர் 16ம் திகதிஇதழ் கூறியதாவது: 'அரசாங்கத்திடமிருந்து சலுகைகள் பெறுவதற்கு பெற்றோர், பிள்ளைகள் அமைப்பின்' சிபார்சினைப் பெற்றுக்கொள்ள வேண்டும், என்றது.

1990 ஜூனில் வடக்கு — கிழக்கில் உள்நாட்டு யுத்தம் மூண்டதும் ந. ச. ச. க. தலைவர்கள் செய்தது என்ன தெரியுமா? கிராமப்புறங்களில்பயங்கரங்களில் ஈடுபட்டுவிட்டு வடக்கு—கிழக்குக்கு சென்று, 'காணமற்போன' பொலிசாரைத் தேடுவதும் கூட தமது அமைப்பின் கடமையாகும் என அறிவித்தனர். படுகொலைகளுக்குப் பலியான குடும்பங்களின் உறவினர்களை மேலும் மேலும் தவறான வழியில் திருப்பும் பொருட்டு, சந்தேகத்துக்கிடமான 'கிறிஸ்தவ சகோதரத்துவ'த்தின் தென்னிலங்கை கிளையையும் இந்த அமைப்புடன் தொடர்புபடுத்திக் கொள்ள அவர்கள் நடவடிக்கை எடுத்தனர்.

யூ. என். பி. அரசாங்கத்தின் மீதான கிராமப்புற ஏழைகளின் கொதிப்பு அதிகரித்துள்ள ஒரு நிலையில் செல்வாக்கிழந்த முதலாளித்துவ ஸ்ரீ. ல. சு.கட்சியுடன் கிராமப்புற மக்களைப் பிணைத்துவிட ந.ச.ச.க. தலைவர்கள் பகிரதப் பிரயத்தனத்தில் முயல்கின்றனர். இதன் ஓர் அங்கமாக 'பெற்றோர் பிள்ளைகள் அமைப்பின்' மேடையில் படுபிற்போக்கு வலதுசாரியான சந்திரிகா பண்டாரநாயக்காவையும் அரவணைத்துக் கொண்டனர்.

நவசமசமாஜக் கட்சியானது முதலாளித்துவ சந்தர்ப்பவாதத்தில் நாற்றம் கண்ட ஓர் கட்சியாகும். அது 1948ல் ஏகாதிபத்திய வாதிகளுடனான சதியின் மூலம் திணிக்கப்பட்ட ஒற்றையாட்சி அரசினையும்முதலாளித்துவ சொத்துமுறையையும் ஏகாதிபத்திய மூலதனத்தின் பகற்கொள்ளையையும் காக்க நின்றுவரும் கட்சியாகும் சிறப்பாக கடந்த வருடங்களாக தொழிலாள வர்க்கத்தினுள் தேசியவாத சந்தர்ப்பவாதத் தலைவர்களின் வலதுசாரிப் பாய்ச்சலுடன் ந.ச.ச.க. தலைவர்களின் சந்தர்ப்பவாத நாற்றமெடுப்பு உச்சக் கட்டத்தினை அடைந்தது.

இக்கட்சியின் தலைவரான வாசுதேவ நாணயக்காரஏகாதிபத்திய நிதி மூலதனத்துக்கு முழுச் சலுகை வழங்கும் பிரேமதாச அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கும் விதத்தில் கூறியதாவது: ''லெனின் செய்தது போன்று பங்குதாரர்களுக்கு குறைந்த பட்சம் 5 ஆண்டு காலமாகுதல் அவர்களின் முதலீடுகளை வைத்துக்கொள்ளும் முறையிருப்பின் அது பாதுகாப்பான பந்தயமாகும்'', 1990 அக்டோபர் 21ம் திகதி'சன்டே டைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டி)ஏகாதிபத்திய நிதி மூலதனத்திற்கு வால் பிடிக்கும் பொருட்டு நாணயக்கார லெனினுக்கும் சேறடித்துள்ளார்.



ஏர்னஸ்ட் மண்டேல்

இதன் அடிப்படையிலேயே இன்று சோவியத் ருஷ்யாவில் முதலாளித்துவத்தினை புனருத்தாரணம் செய்யும் கொர்பச்சேவ் அதிகாரத்துவத்தின் வேலைத்திட்டத்துக்கு ந.ச.ச.க. தலைவர்கள் ஆதரவளிக்கின்றனர்.

1964ல் சமசமாஜக் கட்சியின் மாபெரும் காட்டிக்கொடுப்பினை எதிர்த்த புரட்சிகரத் தொழிலாளர்கள், இளைஞர்களின் ஒரு தலைமுறையையே நாசமாக்கித் (L S S P (R) தள்ளியவரும், புரட்சிகர சமசமாஜக் கட்சியை பப்லோவாதிகளுடன் நெருங்கி ... பின்னர் அத் ... போர்வையினான ... இயக்கத்துடன் இணைந்து கொண்டவரான எட்மண்ட் சமரக்கொடிஇன்று ஐக்கிய செயலகத்திற்கும் ந. ச ச. க. இடையேயான கூட்டுக்கு 'பிரித்' ஓத முன்வந்துள்ளார். நான்காம் அகிலத்தில் அனைத்துலகக் குழுவில் இருந்து ஓட்டம் பிடித்த ஒடுகாலியான கிளிப் சுலோட்டருடனும் எட்மண்ட் சமரக்கொடி உறவு கொண்டிருந்தார்.

நவசமசமாஜக் கட்சியின் 13வது ஆண்டு நிறைவின் பொருட்டு 'ஹரய' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் சமரக்கொடி 'தம்மை உள்ளடக்கிய குழு 1964ல் கட்சியில் இருந்து வெளியேறாது உள்ளிருந்து போராடியிருந்தால் நல்ல பலன் கிடைத்திருக்கும் என...திட்டவட்டமாகக் கூற முடியும். 1964ல் சமசமாஜக் கட்சி ஏகாதிபத்தியச் சார்பு ஸ்ரீ ல. சு.கட்சியுடன் கூட்டரசாங்கத்தில் சேர்ந்ததை எட்மண்ட் சமரக்கோடி 25 ஆண்டுகளின் பின்னர் இன்று அப்பட்டமாக அங்கீகரிக்கின்றார். அந்தளவுக்கு அவரின் வலதுசாரி பயணம் சென்றுள்ளது. இவரின்இந்த அறிக்கையை நவசமசமாஜ மத்தியவாதிகள் தாம் சமசமாஜக் கட்சியினுள் இருந்து கொண்டு நடாத்திய கடைகெட்ட காட்டிக் கொடுப்புக்களை பூசி மெழுகுவதற்கு இன்று ஐக்கிய செயலகத்துடன் மாட்டிக்கொள்ள எடுக்கும் நடவடிக்கைகளின் பிற்போக்குத் தனத்தை மூடி மறைக்கவும் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்,

மாபெரும் புரட்சியாளரான லியொன் ட்ரொட்ஸ்கியின் பெயரைச் சுரண்டிக் கொள்ள இடைக்கிடையே தலைநீட்டும் இந்த மத்தியவாதிகளுக்கும், மார்க்சிசத்தின் மரபுகளை முன்னெடுத்துச் செல்லும் ட்ரொட்ஸ்கிசத்துக்கும் இடையே எது விதமான உறவும் கிடையாது. தவறான விளக்கத்தின் பேரில் இக்கட்சியினுள் தொழிலாளர்கள் அல்லது இளைஞர்கள் சென்றிருப்பின் அவர்கள் உடனடியாக அதிலிருந்து வெளியேறுவதற்கான காலம் வந்துவிட்டது. ஏகாதிபத்தியத்தின் நலன்களை ஈட்டு பெரும் அக்கறை கொண்ட பேராசிரியர் ஏர்னஸ்ட் மண்டேல் என்ற திரிபுவாத ஆசானுக்கும் தேசிய சந்தர்ப்பவாதத்தினுள் நாற்றம் எடுத்த நவசமசமாஜ தலைவர்களுக்கும் இடையேயான இப் புதிய கூட்டு, பிற்போக்கு மத்தியவாதத்தின் தோல்வியின் புதிய கட்டத்தினைக் குறிக்கின்றது. இது மூன்றாம் உலக யுத்தப் பாதையில் இறங்கியுள்ள ஏகாதிபத்தியத்தின் கையறு நிலையுடன் பிணைக்கப்பட்டுள்ளது.

ஏகாதிபத்தியத்தின் முரண்பாடுகள் முன்னொரு போதும் இல்லாத விதத்தில் வெடித்து, வெளிப்பட்டதும் உலக யுத்தத்தின் ஆதாளபாதாளமும் தெரிந்தது. இவை கூடவே உலக சோசலிசப் புரட்சிக்கான நிலைமைகளையும் சிருஷ்டித்தன இந்நிலையில் அனைத்துலகக் குழுவின் தலைமையின் கீழ் நான்காம் அகிலம் உலகத் தொழிலாள வர்க்கம், ஒடுக்கப்படும் மக்களிடையே கண்டுவரும் பேராதரவினைத் தகர்க்கும் பொருட்டு மண்டேல் ந.ச.ச.க. அணிதிரண்டுள்ளது.

இது தொழிலாள வர்க்கத்துக்கு பெரும் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஏகாதிபத்தியத்தின் முக்கிய எதிர்ப்புரட்சி ஏஜன்சியான ஸ்டாலினிச அதிகாரத்துவத்துக்கு எதிராக உலகம் பூராவுமுள்ள தொழிலாள— ஒடுக்கப்படும் மக்கள் கிளர்ந்து எழுந்துள்ளனர். இந்நிலையில் ஏகாதிபத்தியத்தின் பரதுகாப்பின் பேரில் தொழிலாள வர்க்கத்துக்கு எதிராகத் கடைகெட்ட காட்டிக்கொடுப்புக்கு மத்தியவாதிகள் அழைக்கப்பட்டுள்ளனர். இத்துரோகிகளை தொழிலாள வர்க்க இயக்கத்தில் இருந்து விரட்டியடிக்க சகல போராளிகளும் முன்வர வேண்டும்.

அப்பணி வெற்றி பெறவேண்டின், ஏகாதிபத்தியத்தின் தாக்கங்களை தொழிலாளர் இயக்கத்தில் பிரதிநிதித்துவம் செய்த சமூக ஜனநாயக — ஸ்டாலினிசத்துக்கு எதிராகவும், அவ்வாறே பப்லோவாதம் உள்ளடங்கலான ஏனைய வகையறாவைச் சேர்ந்த திரிபுவாதத்துக்கும் எதிராக லியொன் ட்ரொட்ஸ்கியும் நான்காம் அகிலமும் நடாத்திய போராட்டத்தினை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பதாகையின் கீழ் பாராடவேண்டும்.


## தொழிலாளர் பாதை
### சந்தாதாரர் ஆகுங்கள்!

அஞ்சல் கட்டணம் உட்பட

''தொழிலாளர் பாதை'' சந்தா விபரம்:

1 மாதம் — ரூ. 6.00 3 மாதம் — ரூ. 18.00

6 மாதம் — ரூ. 36.00 1 வருடம் — ரூ. 72.00

பெயர் :...............................

முகவரி :...............................

சந்தாக் காலம் :............ ரூ: ........ சதம் ........

சந்தாப் பணத்திற்காகிய அஞ்சல் அல்லது காசுக் கட்டளையுடன் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

நிர்வாகி,
''தொழிலாளர் பாதை''
இல. 90 1-வது மாவிகாகந்தை ஒழுங்கை
கொழும்பு — 10.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இ. தொ. கா. அங்கத்தவர்கள் பேசுகிறார்கள்:

# "தொண்டமான் அரசாங்கத்தில் இருப்பதால் பிரயோசனம் இல்லை, நஷ்டம்தான்"

தோட்டத் தொழிலாளர்களுக்கு விழா முற்பணம் வழங்குவதைச் சாட்டாகக்கொண்டு அம்முற்பணம் வழங்குவதற்கு முன்னரே சம்பளத்தில்மாதாந்தம் ரூபா 75/- வெட்டப்படுவதை எதிர்த்து இலட்சக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் மார்ச் 27ம் திகதி அடையாள வேலைநிறுத்தம் செய்தனர். இத்தொழிலாளர்களுள் கொட்டகலை சேடன் தோட்டத் தொழிலாளியான இராமஜயமும் ஒருவர். இவர் இ: தொ. கா. அங்கத்தவர். இருப்பினும் தொண்டமான்—செல்லச்சாமி தலைமை போட்ட கால்கட்டுக்களை எல்லாம்அறுத்துக் கொண்டு இந்த வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்ட பல்லாயிரக்கணக்கான! இ. தொ. கா. அங்கத்தவர்களுள் இவரும் ஒருவர். இந்த அடையாள வேலைநிறுத்தத்தை முறியடிக்க தொண்டமான் —செல்லச்சாமி மேற்கொண்ட கருங்காலி நடவடிக்கைகளையிட்டு அதிருப்தியடைந்துள்ள இராமஜயம் 'தொழிலாளர் பாதை' நிருபரிடம் கூறியதாவது:

'நான் இட்டத்தட்ட 10 ஆண்டுகள் இ. தொ. கா.வில் அங்கத்தவனாக இருந்துள்ளேன் இலங்கைத் தொழிலாளர் கழகத்தில் இருந்து விலகி, இ: தொ. கா.வில் சேர்ந்தேன். என்றாலும் இ. தொ. கா.வின் கீழ் எமக்கு எந்தவிதமான நன்மையும் இல்லை. தொண்டமான் யூ. என். பி. அரசாங்கத்தில் சேர்ந்து 14 ஆண்டுகள் ஆகின்றன. எந்தவொரு வரவு செலவுத் திட்டத்திலும் எமது சம்பளம் ஒரு சதமும் அதிகரிக்கவல்லை. அரசாங்க ஊழியர்களுக்கு கிடைத்த ரூபா. 200/- அல்லது ரூபா. 300/- சம்பள உயர்வு எமக்குக் கிடைக்கவில்லை. இப்போது வருமான ஊக்குவிப்பு போனசும் கிடையாது. இத்தகைய தலைவர்கள் அரசாங்கத்தினுள் இருக்கும் வரை எமக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை

"தேயிலை விலை உயரும்போது சம்பளத்தைக் கூட்டுவதாக சொல்கிறார்கள். ஆனால் இந்த மாதம் சம்பளத்தில் ரூபா 2/- கழிக்கப்பட்டுள்ளது. இந்த தேயிலை விலை உயர்வையோ அல்லது வீழ்ச்சியையோஎப்படி 'செக்' பண்ணுவது என்று எமக்கு தெரியவில்லை. இத்தலைவர்கள் எமது முன்நோக்கிய பயணத்துக்கு தடையாக இருக்கிறார்கள். இப்போது தொழிலாளர்கள் மேல் கடன் சுமை குவிந்துள்ளது. தலைவர்கள் அரசாங்கத்துள் இருந்தால் எமக்கு நன்றாகச் சேவை செய்யவேண்டும். இல்லையேல் வெளியேற வேண்டும்."

### சம்மதம்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வேலைத்திட்டத்துக்கு தனது சம்மதத்தைத் தெரிவித்த இராமஜயம், தொண்டமான் — செல்லச்சாமி தலைமை யூ. என். பி. அரசாங்கத்தில் இருந்து வெளியேறி, தோட்டத் தொழிலாளர்களைச் சுயாதீனமாக அணிதிரட்ட வேண்டும் என்ற பு. க. க. பிரச்சார இயக்கத்துக்கு ஆதரவை வழங்கினார். அத்தோடு ஏப்ரல் 21ம் திகதி பு. க. க. அட்டன் நகர சபை மண்டபத்தில் நடாத்தவுள்ள தொழிலாளர் மகாநாட்டில் கலந்து கொள்ள முயற்சிப்பதாகவும் கூறினார்.

இ. தொ. கா. தலைமைகளை முதலாளித்துவ யூ. என். பி.அரசாங்கத்தில் இருந்து வெளியேறக் கோரும் பிரச்சாரம் தொடர்பாக கொட்டகலை கின்னமண் வெட்டித் தோட்டத் தொழிலாளியான எம். இராமையா கூறியதாவது: "நான்வேலையில் சேர்ந்த நாளில் இருந்து இ. தொ. கா. அங்கத்தவன். எமது பெற்றோரும் இ. தொ. கா.யூனியனில் தான் அங்கத்தவராக இருந்தார்கள். அவர்கள் இப்போது 'பென்சன்' எடுத்துவிட்டார்கள். பரம்பரையாக அங்கம் வகித்தும் எமது வாழ்க்கை நிலைமையில் எதுவித மாற்றமும் இல்லை. யூனியன் தலைவர் தங்கள் வாழ்க்கையை உயர்த்துவதில் தான் கவனம் செலுத்துகிறார்கள். தொழிலாளர்களைப் பற்றி சிந்திப்பது கிடையாது. நாங்கள் இன்னும் வெள்ளைக்காரன் ஆட்சி நிலைமையில் இருந்து விடுபடவில்லை இன்றும் வெள்ளைக்காரன் ஆட்சிக்கால லயன் அறைகளில் தான் ஜீவிக்கிறோம். எனக்கு கல்யாணமாகிவிட்டது. ஆனால் இன்னமும் பெற்றோரின் 90 சதுர அடி 'லயன்' அறையில் தான் ஜீவிக்கின்றேன். வேறு வீடு இல்லை. தொண்டமான் கொட்டகலையில் வீடு கொடுத்திருக்கிறார். அவை மழனியாண்டி, முத்துராமன்போன்ற முதலாளிகளுக்கே கிடைத்திருக்கிறது. தொண்டமான் எப்போதும் முதலாளிகள் பக்கம்தான். தொழிலாளிக்கு உள்ள உரிமையையும் இந்த அரசாங்கத்துடன் சேர்ந்து பறித்து வருகின்றார். பிரதேச சபை தேர்தலிலும் தொண்டமான் முதலாளிகளையே வேட்பாளர்களாக நிறுத்துகிறார். தொழிலாளிகளுக்கு எந்த சந்தர்ப்பமும் கிடையாது. தோட்டங்களில் தொண்டமானால் கொடுக்கப்பட்ட நிலங்களும் முதலாளிகளுக்கே கிடைத்துள்ளது. இத்தலைவர்கள் தொழிலாளர்களை பட்டரகமாகவைத்திருக்க முயற்சிக்கிறார்கள்: தொழிலாளர்கள் விழித்துக் கொண்டால் தமக்கு ஆபத்து வரும் என நினைத்து அவர்களை எப்போதும் பள்ளத்தில் தள்ளுகின்றார்கள்." என இந்த 26 வயதான இளம் தொழிலாளி குறிப்பிட்டார்.

### புதிய ஆட்சி தேவை

முதலாளித்துவ அரசாங்கத்துடன் தொண்டமான்—செல்லச்சாமி கொண்டுள்ள உறவின் தாக்கம் பற்றிக் குறிப்பிடுகையில் இராமையா மேலும் கூறியதாவது: "தொண்டமான் இந்த அரசாங்கத்தில் இருப்பதால் தொழிலாளர்களுக்கு எதுவித பிரயோசனமும்இல்லை நஷ்டம்தான். நாங்கள் 40



எஸ். தொண்டமான் ஜே. ஆர். ஜயவர்தன

ஆண்டுகள் யூ என். பி. சி. ல. சு. க. முதலாளிகளின் ஆட்சியின் கீழ் வாழ்ந்துள்ளோம். எமது வாழ்க்கையில் எதுவித முன்னேற்றமும் இல்லை. எங்களுக்கு புதிய ஆட்சி ஒன்று தேவை. தொண்டமான் — செல்லச்சாமியை யூ. என். பி. அரசாங்கத்தில் இருந்து வெளியேறக் கோரும் உங்களது பிரச்சாரத்தையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். தொழிலாளர் ஆட்சி வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் நீங்கள் கூட்டும் ஏப்ரல் 21 மகாநாட்டிலும் நான் கலந்து கொள்வேன்."

அட்டன் பெரியடன்பார் தோட்டத்தைச் சேர்ந்த பி: இராமையா என்ற தொழிலாளி, தோட்டத்தில் மீண்டும் வேலை பெற்றுத்தருவதாக கூறி இ. தொ. கா. தலைமை 12 வருடங்களாக ஏமாற்றிய சோகக் கதையை கூறுகையில் கூறியதாவது: "எங்கள் தோட்டத்தில் காட்டுப்பகுதியில் மாணிக்கக்கல் தோண்டியதாக குற்றச்சாட்டி, பொலிசாரின் வேண்டுகோளின் பேரில் 27—2—1979ல் இருந்து நான் வேலை நீக்கம் செய்யப்பட்டேன். இன்றுவரை எனக்கு வேலை கிடைக்கவில்லை. ஒரு குற்றத்துக்கு இரண்டு இடத்தில் தண்டனை அனுபவிக்க வேண்டி உள்ளது. கோட்டிலும் எனக்கு ரூபா. 50/-தண்டம் விதித்தார்கள். தோட்டத்திலிருந்தும் வேலைநீக்கம் செய்யப்பட்டேன். நான் இ. தொ. கா. யூனியனில் தான் அங்கம் வகிக்கின்றேன். இ. தொ. கா. தலைமைக்கு பல கடிதங்கள் அனுப்பினேன். எதுவித பயனும் இல்லை. பணச்செலவுதான் கொழும்பிலிருந்து அட்டன் பிரதேச தலைமைக்கு 'நடவடிக்கை எடுங்கள்' என்று கடிதம் அனுப்புவார்கள். அவ்வளவுதான். பணக்கஷ்டத்தால் இப்போது கடிதம் எழுதுவதையும் நிறுத்திவிட்டேன்.

'தொண்டமான் அரசாங்கத்தில் அமைச்சர் பதவி வகிப்பதால் எங்களுக்கு எதுவித பிரயோசனமும் இல்லை. அவர் வான்சர் காரில் பவனி வருகின்றார். நாங்கள் பட்டினி கிடக்கிறோம். தொண்டமான் — செல்லச்சாமியை அரசாங்கத்திலிருந்து வெளியேறக் கோரும் உங்கள் பிரச்சாரம் கண்டிப்பாக அவசியம். வெளியில் இருந்தால் தான் போராட்டம் ஏதாவது நடாத்துவார்கள் அரசாங்கத்திற்குள் இருந்தால் அதற்கு தலையாட்டுவார்கள்; நீங்கள் நடாத்தும் ஏப்ரல் 21 தொழிலாளர் மகாநாட்டில் நான் கலந்து கொள்வேன்"

### எட்டியாந்தோட்டை

எட்டியாந்தோட்டை கனேயல்ல தோட்டத்தைச் சேர்ந்த லங்கா தோட்டத் தொழிலாளர் சங்க அங்கத்தவரான டி. வடிவேல் 'தொழிலாளர் பாதை' நிருபரிடம் கூறியதாவது: ல. தோ. தொ. சங்கத்தின் தலைவரான டேவிட் இராசையா தோட்டத் துரைமாருக்கு சாதகமாக நடந்து கொள்கிறார், அவர் மாகாண சபை எம். பி.யாக தெரிவான பின்னர் தொழிலாளர்களின் பிரச்சினைகளில் எதுவித அக்கறையும் கிடையாது. எனது எல். ரீ. கேஸ் (லேபர் ரிபியூனல்) சம்பந்தமாக பல தடவை யூனியன் ஆபிசுக்கு அலைந்திருப்பேன். ஆனால் எதுவித தீர்வும் கிடையாது. தோட்டத் துரைமார்களுடன் அவர்கள் நெருங்கிய உறவு வைத்திருப்பதால் தொழிலாளர் பிரச்சினைகளைத் தள்ளிப் போட்டு விடுகிறார்கள். இத்தலைமைகள் முதலாளித்துவ கட்சிகளுடனான கூட்டிலிருந்து வெளியேறும்படி நீங்கள் தொடுக்கும் பிரச்சாரத்துக்கு நான் ஆதரவளிக்கின்றேன்."



இரத்மலானை யூனிவேர்சல் டிசைன் அன்ட் இன்டர்நஷனல் பஷன் பக்டரியைச் சேர்ந்த 1500 தொழிலாளர்கள் 1991 ஏப்ரல் 01ம் திகதியில் இருந்து வேலையிழந்துள்ளார்கள். ஏப்ரல் 1ம் திகதி காலை வழக்கம் போல் வேலைக்கு வந்த இவர்களை 'பக்டரியை கொண்டு நடாத்த முடியாததால் மூடிவிட முடிவு செய்ததாக' கூறும் முதலாளியின் அறிவிப்பு வரவேற்றது கடந்த மார்ச் சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளும் போருட்டு இவர்கள் உள்ளமர்வு வேலை நிறுத்தம் செய்ததும் குறிப்பிடத்தக்கது.

கொழும்பு — 10. 1ஆவது [illegible] இலக்கம் 90. இடத்தில் வசிக்கும் ஆனந்தவக்குபுறவினால்
மஹரகம [illegible] வீதி 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org